15
3.61

REGISTERED No. M. 6165. க. பை. 13

# பத்ஹுல் இஸ்லாம்

# FATH-HUL-ISLAM

மாத பத்திரிகை.

## ஜுலை—1961.

| விஷயம். | பக்கம். |
| --- | --- |
| வான வெளியை 'வகுத்தவன்' யார்? ... | 1 |
| அழகு ராணி—ஹுஸ்ன் ஆரா (சிறுவர் பகுதி) டி. எப். ரஹ்மத்துல்லா-மஆலி ஸாஹிப் (பாகவி) | 5 |
| பதருன்னிஸா (தொடர் கதை) (எ. ஆர். கமால்) | 11 |
| வலீமா விருந்துணவு (மஆலி ஸாஹிப் பாகவி) | 19 |
| திருக் குர்ஆன் சார சங்கிரஹம் (ரஹ்மத் பாகவி) | 23 |
| நாயனின் சிறப்பு (அ. அப்துல் வஹாப்) | 27 |
| ... க்வாஜா முஈனுத்தீன் ஜீவிய சரிதை ... ஆர். மஆலி ஸாஹிப் பாகவி) ... ... | 29 |

... இஸ்லாம் ஆபீஸ் :
... ரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

3L
Q7ᵐ24, N79 SI
N61
187084

# பத்ஹுல் இஸ்லாம்.

சந்தா விபரம்: இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு

| | | |
|---|---|---|
| வருஷ சந்தா | ரூ. | 1–50 |
| தனிப் பிரதி நயா பைஸா | | 0–13 |

மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா ரூ. 2–00

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
பத்ஹுல் இஸ்லாம்,
20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.


புதிய அச்சு! வெளிவந்து விட்டது!!

## உர்தூ ஆஸான்

தமிழ் தெரிந்தவர்கள் ஆசிரியரின்றி 20 நாட்களுக்குள் உர்தூ பாஷையைப் பேசவும் எழுதவும் படிக்கவும் கற்றுக் கொள்ள ஏதுவான புஸ்தகம் இது ஒன்றே. இன்றே ஒரு உர்தூ ஆஸான் புஸ்தகத்தை வாங்கி இந்தியாவின் முக்கிய பாஷையாகிய உர்துவைக் கற்றுக் கொள்ளுங்கள்.

உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் 256-பக்கங்களில் அச்சிட்டு அழகிய இங்கிலீஸ் கலிகோ பைண்டு செய்யப் பட்டுள்ளது. விலை ரூ. 3–00

கிடைக்குமிடம்:—
ஹாஜி எம். எ, ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

فتح الاسلام

# பத்ஹுல் இஸ்லாம்

ஜுலை—1961.

## வான வெளியை ‘வகுத்தவன்’ யார் ?

‘கற்றது கைம் மண் அளவு; கல்லாதது உலக அளவு’ என்றொரு பழமொழி யுண்டு.

“இப்பிரபஞ்சத்தில் மனிதன் கண்டது கடுகளவு; காணாதது மலையளவு’ என்று இதை மாற்றிக் கொள்ளலாம்.

சின்னஞ்சிறு குருவியும் வானவெளியில் பறக்கிறது; பருந்தும் சற்று உயரப் பறக்கிறது; அதை விட உயரமாக கழுகு பறக்கிறது.

குருவி, தான் உயரப் பறக்கும் வெட்ட வெளிவரைதான் வானம் இருக்கிற தென்று நினைக்கிறது. பருந்தும் தான் பறக்கும் வெளிவரைதான் வானவிதானம் இருக்கிற தென்று கருதுகிறது. கழுகுவும் தான் அண்ணாந்து பறக்கும் வெட்ட வெளிவரைதான் முழுவான வெளியும் இருப்பதாக நினைத்துக் கொள்கிறது. ஆனால், அந்த அளவை விட தன் சக்திக்கு மீறி எல்லையைக் கடந்து போவதற்குத் துணிவதில்லை. ஏனெனின் அதற்கு, அதற்கப்பால் போய் ஆகவேண்டிய காரிய மொன்று மில்லை.

ஆனால், பேரறிவு படைத்த மனிதனோ, பேராசையால் பீடிக்கப்பட்டிருக்கிறான். எதிலும் அவனுக்கு நிம்மதி கிடையாது; எந்த நிலையிலும் அவனுக்கு அமைதி கிடையாது.

மனிதன் கண்ணுக்கு இரண்டு பிரபஞ்சங்கள் தென்படு கின்றன. ஒன்று பூமி; மற்றொன்று வானம். பூமியில் மனிதன் தோன்றி ஐயாயிரம் பத்தாயிரம் ஆண்டுகள் கழிந்திருக்கலாம். இந்த சில்லாயிரம் ஆண்டுகளில் மனிதன், கீழ்ப் பிரபஞ்சமாகிய பூப் பரப்பை சுற்றித் திரிந்து பார்த்து விட்டான். கடலையும் திடலையும் மலையையும் மடுவையும் ஆராய்ந்து பார்த்து விட்டான்.

இந்தப் பூமிப் பிரபஞ்சத்தில், தனக்குத் தெரியாதது ஒன்று மில்லை என்று முடிவுக்கு வந்து விட்டான் மனிதன். மனிதனுக்குத் தான் ஒரு நிலையிலும் நிம்மதி இராதே. எனவே, அவன் பூமிப் பரப்பை விட்டு வானவெளிப்பக்கம்—ஆகாய மார்க்கத்தில் கவனத் தைச் செலுத்தினான். பூமியில் அலைந்ததைப் போல், அண்ட வெளியிலேயே உலாவ வேண்டுமென்ற ஆசை ஏற்பட்டது.

அவன் பட்சியைப் பார்த்து ஆகாய விமானத்தைக் கண்டு பிடித்தான் சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னால். அன்று தொடுத்து இன்றுவரை அவன் ஆகாய விமானத்தின் மூலம் வான விதானத் தைத் துழாவி விட்டான்.

* * *

'உயர உயரப் பறந்தாலும் ஊர்க் குருவி பருந்தாகுமா?'' என் றொரு பழமொழியுண்டு. மனிதன், தன் விஞ்ஞான அறிவால் ஆகாய விமானத்தைக் கையாண்டு விட்டாலும், வான விதானத்தில் ஒரு குறிப் பிட்ட உயரம்தான் அவனால் பறக்க முடிந்தது. மேலே மேலே போனால் அங்கு 'வாயு மண்டலம்' என்ற காற்றுப்பிரபஞ் சம் இல்லையாம். ஆகாயவிமானத்து விசிறிகள் சுழலாமல் நின்று விடுகிறதாம்.

ஆகவே, வானவெளியிலே இன்னும் மேலே போவதற்கு என்ன செய்யலாம் என்று யோசித்தான். பருந்தைப் பார்த்து ஆகாய விமானத்தைக் கண்டு பிடித்தவன், வாண வேடிக்கையில் கொளுத்தி விடப்படும் 'அவுட்' வாணத்தைப் பார்த்து 'ராக்கெட்' என்னும் விண் வெளிக்கருவியை கண்டு பிடித்துக் கொண்டான்.

இந்த இரகசியக் கருவி வாணவெடி மருந்தைப் போன்ற அணு சக்தியினால் உந்தித் தள்ளப்படுகிறது. மணிக்குப் பல்லா யிரம் மைல் தள்ளிக்கொண்டு போய்விடுகிறது வான வெளிக் கூண்டை.

187084

கூண்டில் மனிதன் உட்கார்ந்து கொள்ளுகிறான். அபாரமான அணு சக்தி அவனை வான வெளிப்பிரபஞ்சத்தில், வாயு மண்டலத்தையும் தாண்டிக் கொண்டுபோய் விட்டு விடுகிறது. அங்கு வாயு என்னும் காற்றும் கிடையாது. பூமியின் ஆகர்ஷணம் என்னும் தொடர்பும் கிடையாது.

1957-ல், ரஷ்ய விஞ்ஞானிகள், இந்த வான வெளிப் பாய்ச்சல் சாதனையில் சிறிது ஆற்றலைக் காட்டினார்கள். முதலில் ராக்கெட்டில் நாயை அனுப்பி, திரும்ப வரவழைத்தார்கள்; பிறகு மனிதனை அனுப்பி ஆகாயப் பாதையில் பூமியைச்சுற்றி வரச் செய்து திரும்ப வரவழைத்துக் கொண்டார்கள்.

இதைப் பார்த்து அமெரிக்க விஞ்ஞானிகளும் அந்த முறையில், வான வெளிப்பாதைப் பாய்ச்சலில் தம் சாதனையை செய்து காட்டினர். ஆனால் ரஷ்யரைப் போல பெரிய சாதனை புரியாவிடினும், அதே முறையில் ஏதோ சாதித்தார்கள்.

* * * *

வானம் என்பது இயற்கைப் படைத்த அற்புதமான பல கோளங்கள் சஞ்சரிக்கும் மகத்தான வெட்ட வெளிப் பிரபஞ்சமாகும். அந்தப் பிரபஞ்சத்தில் வெட்ட வெளியில் சஞ்சரித்துக் கொண்டிருப்பவை பல கோடி நட்சத்திரங்களாகும்.

நம் பூமியி லிருந்து வானத்துப் பக்கம் பார்த்தால், நீல நிற இரத்தினக் கம்பளத்தில், பல கோடி வைரக்கற்களை வாரி இரைத்ததைப் போல், பளிச்சிட்டுப் பல நட்சத்திரங்கள் காட்சியளிக்கின்றன. இந்த அற்புதமான காட்சியை மனிதன், இப்பூப்பரப்பில் தோன்றிய காலம் முதல் ஆராய்ச்சி செய்து வந்தான்; ஒவ்வொன்றும் ஒரு கோளம்—ஒரு பிரபஞ்சம் என்று கூறுகிறான்.

அப்படியானால் இப்பூமி மட்டும் தான் உலகம் அல்ல. இதைப் போல் எத்தனையோ உலகங்கள் இருப்பதாக ஏற்படுகிறதல்லவா? ஆம். நாம் வசிக்கும் பிரபஞ்சம் மண்ணுலகம். வானவெளியில் தென்படுபவை விண்ணுலகம். அப்படி யென்றால், அது மண், நீர், காற்று ஆகியவற்றால் ஆனதல்ல. ஆகையால் அங்கு, மண்ணில் வாழும் மனிதன் உயிர் வாழ முடியாது.

அப்படிப் பட்ட வான வெளிப் பிரபஞ்சத்துக்கும் போய் உயிர் வாழ வேண்டு மென்று, மனிதனாகப் பிறந்தவன் பேராசைப் படுகி

ருன். அப்பிரபஞ்ச கோளங்களில் மிக அருகில் இருப்பது சந்திரனும்; செவ்வாயாம். முதலில் சந்திரனுக்குப் போய் இடம் பிடித்துக் கொள்ளப் பார்க்கிருன் மாந்தன்.

மனிதன் மண்ணில் தோன்றி, ஆகாயத்தைக் கண்டுபிடிக்க ஐயாயிரம் வருஷமாயிற்று. இனி சந்திரனைக் கண்டு பிடிக்க எத்தனை ஆண்டுகள் ஆகுமோ?

* * * *

மனிதன் வான வெளிப்பக்கம், ராக்கெட்டின் மூலம், அணு சக்தியின் உதவியால், புது யாத்திரை புரிய ஆரம்பித்து விட்டான். அவன் சந்திரனுக்குப் போய் சேர்ந்து விட்டாலும், வானப் பிரபஞ்சத்திலுள்ள கோடிக்கணக்கான கோளங்களைக் கண்டு பிடிக்க வேண்டுமே, மனிதனுக்கு ஆற்றல் உண்டா? ஆயுள் போதுமா? அறிவு போதுமா? ஆராய்ச்சி போதுமா? ஆண்மை (சக்தி) போதுமா?

இந்த ஆர்ப்பாட்டத்தில் மனிதன், தன்னை மறந்து விட்டான்; தன்னிலுள்ள ஆத்மாவை மறந்து விட்டான்; ஆத்மாவுக்கு அதிபதி யார் என்பதை மறந்து விட்டான். வானவெளியில் செல்கிருன். ஆனல் வெளியை அமைத்தவன் யார் என்பதை ஆராய மறந்து விட்டான்.

ஊருக்குப் போகும் பாதையை ஆராய்ந்து கொண்டிருப்பது பெரிதா? பாதையை அமைத்தவன் யார் என்பதை அறிந்து வழி படுவது பெரிதா? வானவெளியை அமைத்தவன் ரப்புல் ஆலமீன்! சர்வலோக இரக்ஷகன். அவனை வழிபட்டுத் துதித்து வணங்கி தொழாத மனிதன், வானவெளியை எப்படி வெற்றி கொள்ளப் போகிருன்.? அல்லாஹு அக்பர்!




# அழகு ராணி-ஹுஸ்ன் ஆரா

டி. எப். ஆர். மஆலி சாஹிப் (பாகவி)

## [5]

அந்த மாது, பேராச்சரியத்தோடு இளவாலிபனை நோக்கினாள். அவன் மீது இரக்கமும் பச்சாத்தாபமும் ஏற்பட்டது அவளுக்கு. "அப்பா, முதல் நிபந்தனையை நீ நிறைவேற்றி விட்டது மிகவும் சந்தோஷப்பட வேண்டிய விஷயம் தான். ஆனால் இரண்டாவது நிபந்தனை, அப்படி சுலபமானதாகத் தெரிய வில்லையே! நீயோ வயதில் சின்னவனாக இருக்கின்றாய்? பூதங்களுடனும் பேய் களுடனும் நீ எப்படி போராடப் போகிறாய்? 'குல்பரீ' என்னும் அந்த புஷ்பக்கன்னி எங்கிருக்கிறாள் தெரியுமா? கோஹேகாப் என்னும் பயங்கரமான மலைகளுக்கு அப்பால், 'குல்மஹல்' என்றொரு மாய மாளிகை இருக்கிறது. அங்கு பன்னிரண்டு பூதங்கள் காவல் காத்துக் கொண்டு இருக்கிறார்கள். அங்குப் போவதற்கு முடியாது. அப்படிப் போனாலும் அந்தப் பூதங்களை ஜயிக்க வேண்டும். அந்தப் பொல்லாத பூதங்களின் கண்ணில்பட்டு விட்டால், உயிர் தப்புவது மிகவும் துர்லபம். பிள்ளாய், நீ ஊருக்கே போய்ச் சேர்ந்து விடு; அழகு ராணியின் ஆசையை விட்டு விடு" என்று இதோபதேசம் சொன்னாள் கிழவி.

இதற்கெல்லாம் நம் வீர இளவரசன் ஹஸன் பாஷாவா பயந்து விடுவான்? "நான் கட்டாயம், இந்த இரண்டாவது நிபந்தனையையும் நிறைவேற்றியே தீருவேன். எனக்குத் தைரியமும் பக்க பலமும் உண்டு. அதைப்பற்றி விபரம் கூறியதற்காக உனக்கு நன்றி செலுத்துகிறேன். இதோ, நான் இப்போதே புறப்பட்டுப் போகிறேன். எனக்கு விடை கொடு. ஆண்டவன் கிருபையால் நான் இரண்டே நாளில், காரியம் முடித்துக் கொண்டு திரும்பி விடுவேன். அப்படி, மூன்றாவது நாளும் நான் திரும்பி வரா விட்டால், எனக்கு ஏதோ ஆபத்து நேரிட்டு விட்டதென்று நினைத்துக்கொள்" என்று இளவரசன், அக்கிழவிக்கு ஆறுதல் சொல்லி விட்டு ஊரை விட்டுப் புறப்பட்டான்.

* * * *

இளவரசனிடம் மாயப் பாதக்குரடு இருக்கிறதல்லவா? அதன் மீது ஏறிக் கொண்டு ஆகாய மார்க்கமாய் புறப்பட்டான் இளவரசன்; அந்தப் பாதக்குரடை கொடுத்துதவிய பக்கீர் பாபாவை நினைத்துக் கொண்டான். சொற்ப நேரத்துக்குள் இளவரசன், கோஹே காப் என்னும் பயங்கர மலைப் பிரதேசத்தை யடைந்தான்.

அந்த மலைப் பிரதேசத்தில், ஒதுக்கமான ஓர் இடத்தில், ஒரு அழகான சோலை காணப்பட்டது. அந்த இடத்தில் போய் இறங்கினன் இளவரசன் ஹஸன் பாஷா.

பிறகு சிறிது உள்ளே நடந்து சென்று பார்த்தான். அங்கு பரீ என்னும் மலைக்கன்னிகை திரிந்து கொண்டிருந்தாள். அவள், இளவரசனைக்கண்டு ஆச்சரியப்பட்டு அருகில் வந்து பார்த்தாள்.

“ஏ அழகிய மனிதனே, நீ ஏன் இங்கு வந்தாய்? இது பூதங்களும் மலைக்கன்னிகளும் சஞ்சரிக்கும் இடம் ஆயிற்றே; மனிதனுகிய நீ இங்கு வரலாமா? வரக் கூடாதே. நீ எப்படி வந்து சேர்ந்தாயோ! சரி போகட்டும். நீ என்ன காரியமாக இங்கு வந்தாய்? உன் மீது எனக்கு இரக்கம் உண்டாகிறது. நீ உன் வரலாற்றைச் சொல். என்னல் உனக்கு உதவி செய்ய முடிந்தால், உதவி செய்கிறேன்” என்று சொன்னுள் அந்தப் பரீ என்னும் மலைக்கன்னி.

இளவரசன், அவளுடைய நல்ல குணங்களுக்காக திருப்தியடைந்து, தன்னுடைய வரலாறு முழுவதையும் சொல்லி, இனி தன்னுடைய கோரிக்கை என்ன வென்பதையும் எடுத்துரைத்தான்.

உத்தமனுன இளவரசன் மீது, அந்த மலைக்கன்னிக்கு மேலும் இரக்கம் உண்டாயிற்று. எந்த வகையிலாவது இளவரசனுக்கு உதவி செய்ய வேண்டு மென்று மனதில் தீர்மானித்துக் கொண்டாள்

* * * *

குல்பரீ யுடைய கலியாணத்துக்காக தயார் செய்யப்பட்டிருக்கும் செம்பவள—முத்துப் பல்லக்கை, இந்த மனித இளவரசனுக்கு கொண்டு வந்து கொடுக்க வேண்டுமே! இதற்கும் துணிந்து விட்டாள் அந்தக்கன்னி! காரணம் என்னவெனில், குல்பரீவுக்கும் இவளுக்கும் ஏற்கெனவே கொஞ்சம் விரோதம் உண்டு. ஆகவே, அவளுக்குரிய பவளப் பல்லக்கை, இம் மனித வாலிபனுக்கு எடுத்து கொடுத்து விட முடிவு செய்தாள்.

“ஏ அழகிய வாலிபனே! இன்றிரவு நடுஜமாத்துக்குப்பின் நீ, இதோ இந்த இடத்தில் தங்கி இரு. நான் எந்த விதத்திலாவது அந்தப் பல்லக்கை கொண்டுவந்து உன்னிடம் சேர்த்து விடுகிறேன். அதைக் காவல் காக்கும் பன்னிரண்டு பூதங்களில் ஒருவன், என்னுடைய சித்தப்பன். அவனுடைய உதவியால் எப்படியாவது அந்தப் பல்லக்கை கொண்டு வந்து விடுகிறேன்” என்று சொல்லி விட்டு மறைந்தாள் மலைக்கன்னி.

மலைக்கன்னியின் கட்டளைப் பிரகாரமே, இளவரசன் ஹஸன் பாஷா, அந்த மலைச் சோலைக்குப் பக்கத்தில், இரவு நடுஜாமம் வரை காத்திருந்தான். இரவு வெகு நேரம் கழிந்து, அந்தப் பக்கம் நாலைந்து பேர்களுடைய சப்தம் கேட்டது. என்னவென்று பார்த்தான் இளவரசன். நாலைந்து அடிமைகள், மிகச் சிரமப்பட்டு ஒரு மிக அழகான செம் பவளப் பல்லக்கை தூக்கிக் கொண்டு வந்தனர். மலைக்கன்னி யும் கூடவே வந்தாள்.

மலைக்கன்னி, இளவரசனை நோக்கி, "வாலிபரே, நான் என் வாக்குறுதிப்படி இந்தப் பல்லக்கை கொண்டு வந்து விட்டேன். நீர், இங்கு வருவதற்கு உபயோகித்து வந்த மாயப் பாதரக்ஷையில் நீர் ஏறிக் கொள்வீராக. உன்னுட னேயே, இந்தப் பூத அடிமைகளும் பல்லக்கைத் தூக்கிக் கொண்டு பறந்து வருவார்கள். நீ போய்ச் சேர வேண்டிய இடத்தில் இதைக் கொண்டு வந்து சேர்த்து விட்டுத் திரும்பி விடு வார்கள். வாலிபரே, நான் உமக்கு இன்னொரு உதவியும் செய்கிறேன். இதோ, என்னுடைய தலை ரோமத்திலிருந்து ஒரு இழையைத் தருகிறேன். இதைப் பத்திரமாக வைத்துக் கொள். என்னுடைய உதவி உனக்குத் தேவையானால், இந்த ரோமத்தை தீ வெளிச்சத்தில் காட்டு. உடனே நானாவது என்னுடைய ஆட் களாவது உனக்கு உதவி செய்ய வருவோம்" என்று சொல்லி ஒரு மயிர் இழையையும் கொடுத்தனுப்பினாள் மலைக்கன்னி.

இளவரசன் ஹஸன் பாஷா, தன் மாயக்குரடு மீது ஏறிக் கொண்டு பறந்தான். அடிமை பூதங்கள், செம்பவளப் பல்லக்கை தூக்கிக் கொண்டு பறந்தனர். சிறிது நேரத்தில் யாவரும் அழகு ராணி ஹுஸ்னு ஆராவின் ஊர் வந்து சேர்ந்தனர்.

அந்த அழகிய பல்லக்கை, அழகு ராணியின் அரண்மனையில் ஆறாவது மாடியில், சயன அறைக்குப் பக்கத்தில் கொண்டு போய் வைக்கும்படி கட்டளை யிட்டான் இளவரசன். அப்படியே நொடியில் கொண்டு போய் வைத்து விட்டுப் போய் விட்டனர் பூதகணங்கள்.

* * * *

அப்போது அழகு ராணி ஹுஸ்னு ஆரா, தன் அம்ச தூளிகா மஞ்சத்தில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். இளவரசன், அவள் அருகில் சென்று, அவளது எழிலான சௌந் தரிய முகத்தையும், உடல் அழகையும் சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு, அருகில் இருந்த மயில் விசிறியை எடுத்து மெள்ள வீசி, இளவரசியை விழிப்புறச் செய்தான்.

இளவரசி ஹுஸ்ன் ஆரா, மெள்ள கண் விழித்துப் பார்த் தாள். என்ன ஆச்சரியம்! தான் விரும்பி யிருந்த செம்பவள முத்துப் பல்லக்கு எதிரில் இருப்பதையும், மற்றொரு இரவு, எலு

மிச்சப்பழம் வெட்டும் சபதத்திற்கு வந்து தப்பி ஓடும் போது தன்னுடைய அம்பு கணைக்கு இலக்கான அழகிய வாலிபன், தனக்கு மயில் விசிறியால் உபசாரம் செய்வதையும் பார்த்து, அழகு ராணி மட்டற்ற மகிழ்ச்சி யடைந்தாள். ஆனால் அந்த சந்தோஷத்தை எப்படி தெரிவித்துக் கொள்வதென்று புரியாமல், விழித்துக் கொண்டிருந்தாள்.

அரசிளங்குமரியின் உபசரிப்பையோ ஆக்ஞையையோ எதிர் பார்த்திராத இளவரசன் "ஏ, அழகு ராணி எனப்படும் இளவரசியே, இதோ, நீ விரும்பிய பவளப்பல்லக்கு கொண்டு வந்து சேர்த்து விட்டேன். இனி இதைக் காப்பாற்றிக் கொள்வது உன் பொறுப்பு" என்று சொல்லி விட்டு, சிறிதும் தாமதியாமல், தன் மாயக்குரடு மீது ஏறி நின்று, மாயமாய் மறைந்து போய் விட்டான். இளவரசி வெகு ஏக்கத்தோடு அவன் போன திக்கையே பார்த்துக் கொண்டு இருந்து விட்டாள்.

* * * *

அங்கிருந்து, இளவரசன் ஹஸன் பாஷா, தன் இருப்பிடமாகிய சத்திரத்துக்கு வந்து சேர்ந்தான். பரிசாரகக் கிழவி, இளவரசனைக் கண்டு முகமலர்ச்சியோடு வரவேற்றாள். 'போன காரியம் ஜெயம் தானே, பிள்ளாய்!', என்று கேட்டாள்.

"ஜயம் இல்லாமல் திரும்புவேனா? இரண்டாவது நிபந்தனையையும் பூர்த்தி செய்து விட்டேன். இன்னொரு நிபந்தனை பாக்கி இருக்கிறது. அதையும் நிறைவேற்றித் தீரவேண்டும்" என்று பதில் கூறி விட்டு அன்றிரவை நிம்மதியாகக் கழித்தான்.

* * * *

மறு நாட் காலை, வழக்கம் போல் அரசரின் தர்பார் கூடியிருந்தது. அச்சமயம் நம் வீர இளவரசன் ஹஸன் பாஷா, அரச சபைக்கு வந்து, மன்னர்க்கு ஸலாம் செய்தான். நேற்றிரவு இவ்வளவரசன், கிடைத்தற்கரிய செம்பவளப் பல்லக்கை கொண்டு வந்து சேர்த்து விட்டதை அரசன், தன் மகள் ஹுஸ்னு ஆரா மூலம் கேட்டுத் தெரிந்து கொண்டிருந்தான். ஆதலின் அதைப்பற்றி அதிகம் பேசிக் கொள்ள வில்லை.

இளவரசன், அரசர் முன் மரியாதை செய்து, 'அரசே, இரண்டாவது நிபந்தனையும் தீர்ந்து விட்டது. இனி மூன்றாவது நிபந்தனை என்னவென்று சொல்லுங்கள். அடியேன் அதையும் தீர்த்துவைக்க காத்திருக்கிறேன்" என்று விண்ணப்பித்து நின்றான்.

அதற்கு அரசர், இளவரசனை புன்முறுவலோடு பார்த்துச் சொன்னதாவது: "இளங்குமரனே, கேள். மூன்றாவது, இறுதி நிபந்தனை தான் முக்கியமானது. இதை நிறைவேற்றி வைப்பவர்க்குத்தான் நான் என் அருமை மகளை, சந்தோஷத்துடன் மண முடித்துக் கொடுப்பேன். அது யாதெனில்: ஸஹர் நாட்டு இள

வரசன், தன்னுடைய கலியாணத்துக்காக ஓர் அபூர்வமான உடையை, வெகு காலமாக தயாரித்து வைத்திருக்கிறான். அதைக் கொண்டுவந்தால் தான் என் மகள் ஹுஸ்ன் ஆராவை நான் கலியாணம் செய்து கைப்பிடித்துக் கொடுப்பேன்'' என்று கூறினார்.

அதற்கும் இளவரசன் ஹஸன் பாஷா சம்மதம் தெரிவித்து, அங்கிருந்து புறப்பட்டு வெளியே வந்தான். பிறகு நேரே தன் இருப்பிடமான சத்திரத்திற்கு வந்து, கிழவியைக் கண்டு, மூன்றாவது நிபந்தனையை நிறைவேற்றுவதற்காக தான் புறப்பட வேண்டி இருக்கிறதென்பதை தெரிவித்துக் கொண்டான். "பாட்டி, நான் இப்போதே புறப்பட்டுப் போகிறேன். இன்று முதல் ஏழு நாட்களுக்குள் நான் திரும்பி வந்து சேர்ந்து விடுவேன். அப்படி நான் வராமல் போனால், எனக்கு ஏதோ விபத்து நேரிட்டிருக்கிறதென்று நினைத்துக்கொள்'' என்று சொல்லி விட்டு, தன்னுடைய மாயக் குரடான கால் கட்டை மீது ஏறி நின்று, "கோஹேகாப் என்னும் மலைக்குப் போ'' என்று கட்டளை யிட்டான். அந்தப் பாதரக்ஷையானது ஆகாய விமானம் போல் அவனை அந்தரமாகக் கொண்டு சென்று, கோஹேகாப் மலைப்பிரதேசத்தில் முன்னர் அவன், கண்ட சோலை வனத்துப்பக்கம் கொண்டு போய் விட்டது.

அப்போது அந்த மலைச் சோலையில் பரீகள் என்னும் மலைக் கன்னிகள் உலாவி விளையாடிக் கொண்டிருந்தனர். தாங்கள் தனித்து விளையாடும், சோலையில் ஒரு மனிதன் வந்து நுழைந்து விட்டதை அறிந்ததும், அவர்கள் தங்கள் மாயா சக்தியால், அந்த வாலிபனை சோலையிலுள்ள ஒரு சிறைக்குள் போட்டு அடைத்து விட்டனர். அன்னியர்கள் வந்தால் பிடித்து அடைக்கும் மனிதச் சிறைசாலை அது.

சிறைச்சாலைக்குள் போடப்பட்ட வாலிபன், சிறிது நேரம் சிரமப்பட்டுக் கொண்டிருந்தான். பிறகு அந்த பரீ என்னும் மலைக் கன்னி கொடுத்த 'மயிர் இழை' ஞாபகத்துக்கு வந்தது. உடனே அதை எடுத்து பரீயை நினைத்து, அதற்கு கொஞ்சம் வெளிச்சம் காட்டினான். என்ன ஆச்சரியம், அன்று செம்பவளப் பல்லக்கு கொண்டு வந்து கொடுத்த பரீ கன்னியின் ஏவளாள் பூதம், அந்தச் சிறைச்சாலை மேல் முகட்டை பிய்த்துக் கொண்டு உள்ளே தோன்றி. "ஓ மனித எஜமானே, உமக்கு என்ன வேண்டும், என்ன உதவி தேவை?'' என்று கேட்டான்.

"ஏ, பரீ கன்னியின் பூதமே! என்னை இவ்விடத்து மலைக் கன்னிகள், இந்த சோலைச் சிறைக்குள் அடைத்து விட்டனர். முதலில் என்னை இச்சிறையிலிருந்து விடுவிக்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டான்.

(தொடரும்)

வெளிவந்து விட்டது!   வெளிவந்து விட்டது!!

# நஸ்ஹுல் ஹதீது, வபத்ஹுல் மஜீத்

புதிய இரண்டாம் பதிப்பு

இவ்வுலகில் இன்ஸானாகப் பிறந்த ஒவ்வொருவரும், சிருஷ்டிக்கர்த்தாவாகிய அல்லாஹு தஆலாவை அறிந்து ஹகீகத்தை உணர்ந்து இபாதத்து செய்ய வேண்டியது அத்தியாவசியக் கடமை. இதற்கு இல்மு, ஒழுக்கம், ஈமான், இஸ்லாம், அமல், ஷரீஅத் முதலிய முஆமலாத்து களைத் தெரிந்து கொள்ள வேண்டியது முதற்பெரும் கடமையாகும்.

இந்த அரிய பெரிய நூலாகிய "நஸ்ஹுல் ஹதீது வபத்ஹுல் மஜீது" என்பது நமது நபிகள் நாயகம் ரஹ்மத் துல்லில் ஆலமீன் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவாய் மலர்ந்தருளிய ஹதீதுக ளென் னும் திருவாக்கியங்களைக் கொண்டும், ஸஹாபாக்கள், ஒலி மார்கள் ஸாலிஹீன்கள் நாதாக்களுடைய நஸீஹத்துகள் ஹிக்காயத்துகள் முதலிய உபதேச உபமேய ஆகமங்களை ஆதாரமாகக் கொண்டும், தீனுல் இஸ்லாத்தின் எல்லா மஸ்அலாக்களையும், விஷயங்களையும் தத்துவங்களையும் எடுத் தோதும் அற்புதமான நூலாகும். இந்த ஒரு கிதாபு மட்டும் கையில் யிருந்து விட்டால் தமிழ் முஸ்லிம்களுக்கு வேறெந்த கிதாபின் தேவையும் இராது. அதாவது இதில் இல்லாத விஷயமே இல்லையென்று சொல்லலாம். இதன் அருமை நேரில் பார்த்தாலே தெரிய வரும்.

இதன் விலை ரூ. 9–60

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதரூஸ் 5.

# பதருன்னிஸா

கற்பனை காவியம்

(ஏ. ஆர். கமால்)

## 7

பதருன்னிஸா எஸீதின் அரண்மனைக்குள் நுழைந்த போது அரச சபை கூடியிருந்தது. 'எந்தப் பெண்ணானாலும் சரி! அரசனைப் பார்க்க வேண்டுமென்று அரண்மனைக்குள் நுழைந்தால், அவளை யாரும் தடுக்கக் கூடாது' என்று பெண்பித்தனான எஸீத் கட்டளை யிட்டு இருந்த படியால் பதருன்னிஸா யாதொரு தங்கு தடை யில்லாமல் நேரே எஸீதின் சமூகம் சென்று வணங்கி நின்றாள்.

"நீ யார்? இதற்கு முன் நான் உன்னை எங்கோ பார்த்த ஞாபக மாக இருக்கிறதே! உன் பெயரென்ன? நீ என்னை நாடி வந்த காரண மென்ன?" பதருன்னிஸாவைப் பார்த்ததும் எஸீத் கேட்டான். மறந்து போன விஷயத்தை ஞாபகத்தில் கொண்டு வருவதற்காக முகத்தை சுளித்தும், நெற்றியை சுருக்கியும் சிந்தனை செய்தான். அவன் ஞாபகம் செய்வதற்குள் பதருன்னிஸாவே அதை ஞாபகப் படுத்தி விட்டாள்.

"இந்த அபாக்கியவதியை அதற்குள் மறந்து விட்டீரா அரசே! தங்களால் அருளப்பட்ட விஷத்தை அருந்திய பதருன்னிஸா தான்..................."

"பதருன்னிஸா! விஷம் அருந்தியவள்! ஆம்! ஞாபகத்துக்கு வந்தது. விஷம் அருந்தி இறந்து விட்ட உனக்கு மீண்டும் உயிர் எப்படி வந்தது?" பதருன்னிஸாவின் வார்த்தை முடிவதற்குள் அவசரமாகக் குறிக்கிட்டு ஆச்சரியத்துடன் கேட்டான் எஸீத்.

"அதைச் சொல்லத்தானே என் சக்திக்கு மீறிய கஷ்டங்களை எல்லாம் சகித்துக் கொண்டு இப்போது இங்கே வந்து இருக்கிறேன். விபரமாகச் சொல்லுகிறேன் கேளுங்கள்" என்று பதருன்னிஸா சொன்னதும், சபையிலுள்ள அத்தனை பேர்களின் கண்களும் அவள் மீதே பதிந்திருந்தன. 'மாண்டவள் மீண்டும் எப்படி உயிர் பெற்றாள்? அவள் என்ன சொல்லப் போகிறாள்?' என்பதை அறிய அவர்களுக்கு எவ்வளவு ஆவல் மேலிட்டிருக்கிறது என்பதை அவர்கள் முகமே எடுத்துக் காட்டின. பதருன்னிஸா தன் பேச்சை ஆரம்பித்தாள்.

"மண்ணுயிர்களைத் தன்னுயிராய் மதிக்கும் மன்னாதி மன்னா! தாங்கள் முதற்தடவையாக என்னைக் கண்டு மோகங் கொண்டதும்,

மட்டை குடிசையிலே பிறந்து வளர்ந்த மங்கையாகிய நான், மானிலத்தை ஆளும் மஹா ராஜாவாகிய தங்கள் மனதில் இடம் பிடித்துக் கொள்ளுமளவு பாக்கியம் பெற்றிருப்பதை முன்னிட்டு, தாங்கள் என்னை மணந்து மனைவியாக ஏற்றுக் கொள்வீர்கள் என்று மனக் கோட்டை கட்டி மனப்பால் குடித்து மகிழ்ச்சிக் கடலில் மூழ்கி இருந்தேன். ஆனால் நான் தங்கள் மீது கொண்ட காதல் யாவும் கானல் நீராக செய்ததோடு தங்கள் பார்வையில் இருந்தும் அகற்றி விட்டான் சூழ்ச்சிக் காரனும் சுயநல காரனுமான இப்னஸியாத்" இந்த இடத்தில் பதருன்னிஸா சற்று நிறுத்தினள்.

"என்ன? இப்னஸியாதா?? என்ன செய்தான் அவன்???" அவசரமாக கேட்டான் எஸீத். பதருன்னிஸா மேலும் கூறினள்:

நான் நீராடிய பின் சிங்காரித்துக் கொண்டு தங்கள் சமூகம் வரும் போது எங்கோ மறைவில் இருந்து என்னைப் பார்த்தானும் இப்னஸியாத். கண்டதும் என் மீது தீராக் காதல் கொண்டு விட்டானும் கயவன். அதனல் தங்களிடம் இருந்து என்னை எப்படியாகிலும் தட்டிக் கொண்டு போக திட்டமிட்டு சூழ்ச்சி செய்தானும். முதலில் நான் பேசாதபடி மந்திரத்தால் என் வாயை கட்டி விட்டான். அடுத்த படியாக அந்தப் புரத்திற்குள் ஒரு கத்தியை வீசி எறிந்தான். அவ்வளவு தான். நாம் இருவரும் சயன அறையில் இருக்கும் போது இப்னஸியாத் வந்து கதவைத் தட்டியது தங்களுக்குத் தெரியும். தாங்கள் போய் கதவு திறந்தீர்கள். உள்ளே வந்த அவன், தான் வீசிய கத்தியை எடுத்து தங்களிடம் கொடுத்து, நான் அஹ்லபைத்தைச் சேர்ந்தவள் என்றும் தங்களைக் கொல்ல வந்த காதகி என்றும் கதை கட்டி விட்டான். தாங்களும் அவன் பேச்சை நம்பி என்னை சில கேள்விகளைக் கேட்டீர்கள். என் நாவு கட்டப் பட்டிருந்த படியால் நான் தங்கள் கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாதவளாக யிருந்தேன். என் நாவு கட்டப்பட்டிருப்பதை அறியாத நீங்கள், நான் பதில் சொல்ல வில்லை என்பதற்காகக் கடும் சினம் கொண்டு, அதே கத்தியால் என்னைக் கொல்ல வந்தீர்கள். அப்போது இப்னஸியாத் தடுத்து, எனக்கு விஷம் கொடுத்து கொன்று விடலாம் என்று கூறியதால் தாங்களும் என்னை கத்தியால் கொல்லாமல் விட்டு விட்டீர். ஆனல் இப்னஸியாத் எனக்கு விஷம் கொடுக்க வில்லை. அதற்கு மாருக மயக்க மருந்து தான் கொடுத்தான். நான் அதைப் பருகி மயக்க மடைந்ததும் என்னை அடக்கம் செய்வதாக தங்களிடம் சொல்லி விட்டு நேரே தன் மாளிகையில் கொண்டு போய் வைத்துக் கொண்டான்.

"என் மனதைக் கவர்ந்த மன்னவா! மற்றும் சபையிலுள்ள அறிவாளிகளே! சற்று அமைதியுடன் ஆராய்ந்து கூறுங்கள்.

"அரண்மனை பெண்கள் எனக்கு நீராட்டி புத்தாடைகள் அணிந்து அவர்களே என்னை அந்த புரத்தில் கொண்டு வந்து

விட்டார்களே! அப்படியிருக்க மாயமாக எனக்கு கத்தி எப்படி கிடைத்திருக்க கூடும்? இது நிற்க! இப்னஸியாதின் கூற்றுபடி உண்மையில் நான் அஹ்லபைத்தைச் சேர்ந்தவளாக இருந்தால் அந்த வம்சத்திற்கே பரம விரோதியான தங்களை நான் மனப்பூர்வமாகக் காதலித்து இருப்பேனா? ஒரு சமயம், பெண்புத்தி பின்புத்தி என்ற பழமொழிக்கு ஏற்ப, அல்லது காதல் பகைவகை யறியாது என்ற வாதத்தை முன்னிட்டோ, அல்லது பதவியின்பித்துக் கொண்டு தங்களைக் காதலித்து இருப்பேன் என்று வைத்துக் கொண்டாலும், நான் அஹ்லபைத்த சார்ந்த ஆரணங்கு என அறிந்த இப்னஸியாத் ஏற்கனவே இதைத் தங்களிடம் சொல்லாமல் நாம் இருவரும் சயன அறையில் தனித்து இருக்கும் போது கதவைத் தட்டி கூற வேண்டிய காரணமென்ன? அக்கோரத்தில் தான் அவன் இந்த உண்மையை அறிந்தான் என்றாலும் தாங்கள் என்னைக் கொல்லும் தருணம் அவன் தடுக்க வேண்டிய அவசியமென்ன? விஷத்தைக் கொண்டே என்னைக் கொல்ல நாடி இருந்தாலும் விஷத்திற்கு பதிலாக மயக்க மருந்தை கொடுக்க வேண்டிய நிர்பந்தமென்ன? விஷம் தயாரித்தவர்கள் கவனக் குறைவின் காரணமாக மயக்க மருந்தை தயாரித்து விட்டிருப்பார்கள் என்று தர்க்கத்திற்காக வைத்துக் கொண்டாலும், நான் மயக்க மடைந்து விழுந்த பின் நான் மரணமாகி விட்டதாக அல்லவோ கருத வேண்டும்? என்னை மண்ணில் புதைக்க மயானத்திற்கு கொண்டு போக வேண்டிய இப்னஸியாத், தன் மாளிகைக்கு கொண்டு போய் மறைவாக வைத்துக் கொள்ள வேண்டிய மர்மம் என்ன? தன் மாளிகையில் என்னைக் கொண்டு போய் வைத்துக் கொண்டதற்காக தர்கத்திற் காகவும் ஏதாவது காரணம் காட்ட முடியுமா? இவைகளை எல்லாம் கோட்டமிட்டு பார்க்கும் போது இப்னஸியாத் தன் சுயநலத் திற்காக, எந்த அரசரின் உப்பைத் தின்று ஜீவிக்கிறானோ அதே அரசரை ஏமாற்றி நம்பிக்கை துரோகமாக சூழ்ச்சி செய்து, தலை நகரில் இருந்தால் தன் குட்டு வெளிப்பட்டு விடும் என்ற பயத் தாலே 'கூபா'வுக்கு சென்றிருக்கிறான், என்று உள்ளங்கை நெல்லிக்கனிப் போல் நான் சொல்லாமலே விளங்க வில்லையா?" பதருன்னிஸா இத்துடன் நிறுத்தினாள்.

"ஆம்! இப்னஸியாத் அரசரை ஏமாற்றி விட்டான். சூழ்ச்சிக் காரன், நம்பிக்கை துரோகி அவன் ஒழிய வேண்டும்." சபையில் இருந்து ஏக காலத்தில் இவ்விதமாக பல குரல்கள் எழுந்தன. எஸீதுடைய முகமும் கோபத்தினால் கொடூரமாக மாறி விட்டி ருந்தது. பற்களைக் கடித்துக் கொண்டே கூறினான்.

"தன் கை வரிசையை என்னிடமே காட்டி விட்டானா கயவன்? இருக்கட்டும்! கட்டப்பட்ட உன் வாயை எப்போது

திறந்து விட்டான். அவனிடமிருந்து தப்பி நீ எப்படி இங்கு வந்தாய்?"

"கூபா நகருக்கு புறப்பட்ட பின் என் வாயைத் திறந்து விட்டான். இரவு நேரமானதும் ஓர் இடத்தில் தங்க நேர்ந்தது. அவன் ஆழ்ந்த நித்திரையில் இருக்கும் போது நள்ளிரவில் நான் ஓடி வந்து பக்கத்தில் இருந்த ஒரு கிராமத்தில் இரவு கழித்து 'பஜர்' தொழுகைக்கு பின் கால் நடையாகவே, தங்கள் சமூகத்திற்கு வந்து கொண்டிருந்தேன். அவ்வழியாக இந்நகரத்திற்காக வந்து கொண்டிருந்த 'முஸாபிர்' கூட்டம் என்னை விசாரித்து தம் குதிரை மீதே என்னையும் ஏற்றிக் கொண்டு வந்தது." பதருன்னிஸா கூறி முடித்தாள்.

"மஸ்வூத்! வேண்டிய வீரர்களுடன் கூபாவுக்குச் சென்று அந்த நம்பிக்கை துரோகியான இப்னஸியாதை கட்டி இழுத்து வா! அவன் தப்பி ஓட முயற்சித்தால் அங்கேயே கொன்று விடு!" எல்லாவற்றையும் கேட்ட பின் கண்கள் சிவக்க சிம்ம கர்ஜனையில் கட்டளை பிறப்பித்தான் எஸீத்.

"தங்கள் சித்தப்படியே ஸில்ல இலாஹி!" மஸ்வூத் வணங்கியபடி கூறி சென்றான். சபையில் இருந்தோர் அனைவரும் தம்மையும் மறந்து "இப்னஸியாத் ஒழிக" என்று கோஷமிட்டனர்.

"பதருன்னிஸா! உன் வீரத்தையும் தீரத்தையும் மெச்சி உன் அறிவு திறமைக்காக நீ கேட்பதை கொடுக்க சித்தமாக இருக்கிறேன். கேள் பதருன்னிஸா உனக்கு என்ன வேண்டும்?" உணர்ச்சி வசப்பட்டு கூறினான் எஸீத்.

"சீலமிக்க சர்தாஜ்! நான் தங்கள் மீது காதல் கொண்ட காரணத்தால், தங்களை கணவராக அடைந்து தங்கள் அன்பை பெற வேண்டுமென்ற ஒரே ஆசை தான் எனக்கு........." பதருன்னிஸா நாணத்துடன் தலை குனிந்து ஆனால் புன் சிரிப்பை சிந்தியபடி செப்பினாள்.

"உன் ஆசை படி நான் உன்னை மணந்து கொள்ளுகிறேன். இன்று முதல் நீயே இந்நாட்டு மஹாராணி!" சந்தோஷத்துடன் சொன்னான் எஸீத்.

"என் பாக்கியமே பாக்கியம்!" பதருன்னிஸா கூறியதும் "சபை கலையட்டும்" என்று கூறியபடி எஸீத் பதருன்னிஸாவையும் அழைத்துக் கொண்டு உள்ளே சென்று விட்டான்.

அரச சபையிலேயே எஸீத் பதருன்னிஸாவுக்கு மஹாராணி என்ற பட்டம் சூற்றி விட்ட படியால், பதருன்னிஸாவின் ஒவ்வொரு கட்டளையும் அரசனுடைய கட்டளையாக மதித்து நிறைவேற்றி வந்தார்கள் அரசாங்க ஆட்கள்.

அன்றிரவு சயன அறையில் அரசனான எஸீதுக்கு மது மேல் மதுவை ஊட்டிக் கொண்டிருந்த பதருன்னிஸா மதுவில் விஷத்தை

கலந்து ஊட்டி விட்டாள். மது மயக்கத்தோடு விஷமும் கலந்து விட்ட படியால் கொஞ்ச நேரத்தில் எஸீத் மீளாதுயில் கொண்டு விட்டான். ஒரு முறை சிக்கி தப்பி விட்ட வேட்டை மறு முறை தப்பாமல், தப்ப முடியாமல் தன் சாகஸச் சாட்டடியால் செத்து விட்டதைக் கண்டு பெரும் சந்தோஷம் கொண்டாள் பதருன்னிஸா. 'கடமையை நிறைவேற்றி விட்டோம்' என்ற குதூகலம் அவள் உடல் முழுவதிலும் பரவி இருந்தது.

உயிரற்ற எஸீதை உள்ளே விட்டு கதவை பூட்டிக் கொண்டு வெளியே வந்த பதருன்னிஸா, சிறையில் இருக்கும் எஸீதின் புதல்வனை அமீரை உடனே அழைத்து வரும்படி கட்டளை யிட்டாள். அக்கணமே அக்கட்டளை நிறை வேற்றப்பட்டது.

"நீங்கள் தான் அரச குமாரர் அமீரா?" அவனை ஒரு தனி அறைக்கு அழைத்து வந்து கேட்டாள் பதருன்னிஸா.

"என் பெயர் அமீர்! ஆனால் நான் அரசகுமாரனல்ல!! தாங்கள் யார் என்பதை நான் அறியலாமோ!!!" அமீர் கேட்டான்.

"என்னைப்பற்றி இருக்கட்டம்! தற்போது அரசனாக இருக்கும் எஸீதின் குமாரர் தானே நீங்கள்! அவருக்குப் பின் பட்டத்திற்கு வரக் கூடியவர் நீங்கள் தானே!"

"அவர் பிள்ளைதான் நான். என்றாலும் பட்டத்திற்கு வரக் கூடியவன் நான் அல்ல. என் நண்பன் யூசுப். அவனுடைய தந்தையைக் கொலை செய்து விட்டு இந்நாட்டை கைப்பற்றினார் என் அப்பா. இந்த அநியாயத்திற்கு நான் ஒரு நாளும் எவ் வகையிலும் பொறுப்பாளி அல்ல!" அமீர் உண்மை கூறினான்.

"தங்களின் நீதியான பேச்சுக்கும் நேர்மையான நடத்தைக்கும் என் நன்றி! இங்கு சேவகம் செய்பவர்களில் அஹ்லபைத்தை சார்ந்தவர்கள் யார் யார் என்பது தங்களுக்குத் தெரியுமா?" பதருன்னிஸா கேட்டாள்.

"ஏன் ஓரிருவர் இருப்போரையும் ஒழித்துக் கட்டவா?" அமீர் வெறுப்புடன் கூறினான்.

"இல்லை தங்கள் நண்பரை இங்கு அழைத்து வர!"

"யார்? யூசுபையா? அவர் உயிருடன் இருக்கிறாரா? எங்கே இருக்கிறார்? நீங்கள் யார்? இங்கே எப்படி எதற்காக வந்திருக்கிறீர்கள்? தயவு செய்து விபரமாக சொல்லுங்கள்." அமீர் ஆனந்தத்தோடு ஆச்சரியத்தையும் ஆவலையும் கலந்து அவசரமாக வேண்டு கோள் விட்டான்.

"தங்கள் நண்பர் இங்கே வந்ததும் எல்லா விஷயமும் அவரே விபரமாகச் சொல்லுவார்! அவர் தற்போது மஸ்வூத் வீட்டில் இருக்கிறார். அவரை அழைத்து வர அஹ்லபைத்தை சேர்ந்தவர் தேவை. நீங்கள் தயவு செய்து நம்பிக்கையான ஆளை காட்டினால் உடனே அவரை இங்கு அழைத்து வரலாம்."

"தாங்கள் குறிப்பிட்ட மஸ்ஊத் கூட அஹ்லபைத்தை சார்ந்தவன் தான். யூசுபின் மைக்காப்பாளனும் அவனே தான்."

"அது எனக்கும் தெரியும். ஆனால் அவர் இப்போது இங்கு இல்லை. இப்னஸியாதை கைது செய்து கொண்டு வர கூபாவுக்கு சென்றிருக்கிறார். ஆகவே..........."

"என்ன! இப்னஸியாதையா? யார் ஆணை யிட்டது?" பதருன்னிஸாவின் வார்த்தையில் நம்பிக்கை இல்லாதவனாக அவள் சொல்லி முடிப்பதற்குள் அவசரமாகக் கேட்டான் அமீர்.

"தங்கள் தந்தை" பதருன்னிஸா சுருக்கமாக சொன்னாள்.

"என் தந்தையா? என்னால் நம்ப முடிய வில்லையே! அவன் தானே என் தந்தையின் 'உக்கா'வுக்கு நெருப்பு! அவன் செய்த குற்றம்?"

"நம்பிக்கை துரோகம்! விபரம் தங்கள் நண்பர் சொல்லுவார்."

"எல்லாவற்றையும் என் நண்பன் தான் சொல்ல வேண்டுமா? தாங்கள் எதுவும் சொல்லக் கூடாதா? சரி! 'காயி பேஸி பஸாலர் இக்ராம்' என்பவர் அஹ்லபைத்தை சேர்ந்தவர் அவரை அனுப்ப லாம்" அமீர் அறிவித்தான்.

பதருன்னிஸா ஒரு சேவகனை அனுப்பி இக்ராம் என்பவரை அழைத்து, "கடமை தீர்ந்தது, உடனே வாருங்கள்." என ஒரு கடிதம் எழுதி தந்து மஸ்ஊத் வீட்டில் இருக்கும் யூசுபை அழைத்து வரும்படி கட்டளை பிறப்பித்தாள். சற்று நேரத்தில் சுமக்க முடியா சந்தோஷத்தைச் சுமந்து கொண்டு யூசுப் அரண் மனைக்கு வந்தான். வந்ததும் நண்பன் அமீரைக் கட்டிக் கொண்டு ஆனந்த கண்ணீர் வடித்தான்.

இப்னஸியாத் செய்த சூழ்ச்சிகளை யூசுப் அமீருக்கு கூறினான். பதருன்னிஸா யார் என்பதையும் விவரித்தான். அதன்பின் இப்ன ஸியாதை கைது செய்யவும் எஸீதைக் கொல்லவும் தான் செய்த சாகஸ வேலைகளை பதருன்னிஸா விபரமாக எடுத்துரைத்தாள். இவை யாவும் முடிந்தபின் மரணமாகியுள்ள எஸீதிடம் வந்தார்கள் மூவரும்.

அனாதையின் பிணம் போல் அலங்கோலமாக இருந்தது எஸீதின் சடலம். உடலை விட்டு உயிர் பிரிந்து விட்டிருந்தாலும் கண்கள் மட்டும் சற்று திறந்தே இருந்தன. 'துர் செயலை தவிர வேறு எதையுமறியா துர்மார்க்க துரோகிகளின் கதி இறுதியில் இப்படித்தான் இருக்கும்!' என்று உலக மக்களுக்கு அவை அறி வுறுத்துவது போல் இருந்தது.

மரண வாயில் சிக்கி விட்ட தந்தையைக்கண்டு அமீர் கண்களில் இருந்து கண்ணீர் வடிந்தது. அது, தந்தை தாணியை விட்டே போய் விட்டாரே! என்று துன்பத்தினால் வடியும் கண்ணீரா,

அல்லது இஸ்லாம் மதத்திலே பிறந்து இஸ்லாம் மதத்திற்கே மாசு ஏற்படுத்திய மூர்க்கன் இன்றோடு ஒழிந்தான்! என்று மகிழ்ச்சியால் வடியும் கண்ணீரா என்று தெரிய வில்லை.

எஸீதின் மரணத்தை மர்மமாகவே வைத்து மறு நாள் காலை சபையைக் கூட்டினார்கள். மந்திரி பிரதானிகள் எல்லாம் வரிசை கிரமமாக உட்கார்ந்திருந்த அச்சபையில் அமீர் எழுந்து, 'தன் தந்தையும் இப்னஸியாதும் சேர்ந்து 'அரசர் ஹம்ஸா' அவர்களுக்கு செய்த துரோக தனத்தையும், ஹம்ஸா அவர்களின் ஏக புதல்வனான யூசுபை ஒழிக்கச் செய்த சதிகளையும் வெகு விரிவாக எடுத்துரைத்து, சட்டப் பிரகாரம் இச்சிம்மாசனத்திற்கு உடையவர் யூசுப் தானே அன்றி தன் தந்தை அல்ல' என்று வெகு அருமையாக ஒரு பிரசங்கமே செய்து விட்டான். அமீர் சொல்லி முடித்ததும் மறைவில் இருந்த யூசுப் சபையில் தோன்றினான். யூசுப் உயிருடன் தம் முன் காட்சி அளிப்பதைக் கண்ட சபையோர் அத்தனை பேர் முகங்களிலும் மகிழ்ச்சி தாண்டவமாடியது. "எஸீத் ஒழிக! யூசுப் வாழ்க!" என்று எல்லோரும் கத்தினார்கள். அப்போது ஒரு யூசுப் குட்டிப் பிரசங்கம் செய்தான்.

"சபையோரே! மற்றும் மந்திரி பிரதானிகளே! 'எஸீத் ஒழிக!' என்று நீங்கள் சொல்வதற்கு முன்பே அவர் 'அல்லாபுரம்' சேர்ந்து விட்டார் என்பதைத் தெரியப்படுத்திக் கொண்டு இச்சிம்மாசனத்திற்கு உடையவன் நான் தான் என்பதை நான் மறுக்க வில்லை. மறுக்கவு முடியாது. என்றாலும் என்னைச் சிறையில் அடைத்த போது சுயேட்சையாக இருந்த என் நண்பன் அமீர், தந்தை என்றும் பாராமல் நீதிக்காக போராடி என்னை விடுதலையாக்கும் பொருட்டு தன்னைத்தானே சிறையில் அடைத்துக் கொண்டான். நீதியின் இருப்பிடமாகவும், நேர்மையின் பிறப்பிடமாகவும், சத்தியத்தின் சின்னமாகவும் என் உரிமைக்காக குரல் எழுப்பி, அதனால் அவருக்கு நேர்ந்த அளவில்லா துன்பங்களை எல்லாம் பொறுமையின் கடலாக இது காறும் பொறுத்திருந்தார். எனக்காக என் நண்பன் அமீர் எவ்வளவு கஷ்டங்களை அனுபவித்தார் என்பதை எடுத்துரைக்க முடியாது."

"ஆகவே, இதற்கெல்லாம் என் கைமாறாக, என் ஆழ்ந்த நன்றியின் பரிசாக இச்சிம்மாசனத்தையே அவருக்கு அளிக்கிறேன்."

"ஆட்சிக்கு அஸ்திவாரமானது நீதி தான். அந்த நீதி அமீரிடம் வேண்டிய மட்டும் இருக்கிறது என்பதற்கு அட்தாட்சி, அவர் தன் தந்தையையே எதிர்த்ததாகும். மேலும் நான் இறந்து விட்டிருந்தால் எஸீதுக்கு பின் ஆட்சிக்கு வரக் கூடியவர் அவரே தான். ஆகவே, என் நண்பன் அமீர் இந்நாட்டுக்கு அரசராகுவதில் உங்கள் யாருக்கும் ஆட்சேபனை இருக்காது என்று நான் திடமாக நம்புகிறேன்."

 (ஜூலை—1961)

"எனவே, நண்பர் அமீர் இந்த அரச பதவி ஏற்று சீரும் சிறப் போடும் செங்கோல் செலுத்தும்படி இச்சபையின் சார்பாக வேண்டு கிறேன். அதோடு ஆண்டவன் அமீருக்கு நீண்ட ஆயுளைத் தந்து அவர் ஆட்சி இக்கானிலத்தில் நிலைத்து நிற்க அருள் செய்யுமாறு பிரார்த்திக் கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்."

"யூசுப் வாழ்க! அமீர் வாழ்க!! பதருன்னிஸா வாழ்க!!! நீதி ஓங்கு!!!! இஸ்லாம் ஜிந்தாபாத்!!!!!" யூசுப் சொல்லி முடித்ததும் சபையில் இருந்தோர் செய்த கரகோஷம் விண்ணதிர செய்தது. இத்துடன் சபையும் கலைந்தது.

எஸீதின் சடலத்தை ராஜமரியாதையோடு நல்லடக்கம் செய்து விட்டார்கள். கூபாவில் இருந்து கைது செய்து கொண்டு வரப் பட்ட இப்னஸியாதை தூக்கில் ஏற்றி விட்டார்கள்.

இவை எல்லாம் முடிந்த பின் யூசுபுக்கும் பதருன்னிஸாவுக்கும் ஒரு சுபதினத்தில் கோலாகலமாகக் கல்யாணம் நடந்தேறியது என் பதையும் சொல்ல வேண்டுமா?

முற்றிற்று.

---


## கைத்தொழில் சம்பாதனை வழிகள்.

சொற்ப பணத்தை வைத்துக் கொண்டு ஏதாவது ஒரு சிறு வியாபாரம் செய்யலாம் என்ற உத்தேசத்துடன் இருக் கும் ஆட்களுக்குத் தேவைப்படும் விஷயங்களை நூற்றுக் கணக்காக இந்த புஸ்தகம் கொண்டுள்ளது. இந்த புஸ்தகத் தில் உள்ள முக்கிய விஷயங்களுக்கு அட்டவணை அகராதி முறையில் 16 பக்கங்கள் கொண்டது சேர்க்கப்பட்டிருக் கிறது.

இந்த புஸ்தகம் 224-பக்கங்கள் கொண்டது. இதை கிளேஸ் காகிதத்தில் அச்சிட்டு நேர்த்தியான கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

இதன் விலை ரூ. 2–60

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# வலீமா: விருந்துணவு.
# (ஒரு பத்வா.)

தமிழாக்கம்: ம ஆலி சாஹிப் (பாகவி)

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்றஹீம்.

## வினா.

நம் இஸ்லாமிய சன்மார்க்க உலமாக்கள், கீழ்க்காணும் விஷய மாய்என்ன விடையளிக்கின்றனர்? அதாவது: நம்முடைய நாட்டில் (சில ஊர்களில்), சில பேர்வழிகள், நிக்காஹ்வுக்குப் பிறகு, மண மகன் வீட்டில் அளிக்கப்படும் வலீமா என்னும் விருந்துணவு பற்றி எதிரிடையான காரியம் செய்து வருகின்றனர்: ஏதும் விருந்து சாப்பாடு சமைத்துப் படைக்கக் கூடாதென்றும், வெறும் தேனீர்–பிஸ்கெட் (சிற்றுண்டி) கொடுத்து அனுப்பி விட வேண்டுமென் றும் வாதாடுகின்றனர். 'இதற்கு ஏதேனும் மார்க்க ஆதாரம் இருக் கிறதா?' என்று கேட்டால், பணம் செலவிட்டு அரிசி, கறி, பருப்பு, நெய் முதலியன வாங்கிப் பெரும் விருந்துகள் செய்வது 'இஸ்ராப்' என்னும் வீண் செலவு என்றும், பாமரஜனங்களுக்கு இதற்கு அனு மதி அளித்து விட்டால் செல்வத்தை வீணாக்கிவிடுவார்கள் என் றும், ஆகையால் இத்தகைய வீண்செலவான காரியங்களைத் தடுப் பதற்காக வலீமா விருந்துணவு தஃவத்துகள் செய்யாதிருப்பது அவசியம் என்றும் வாதாடுகிறார்கள்.

இதில் மற்றொரு விசித்திரப் பிரச்னை யாதென்றால்: எங்களூரில் காஜிசாஹிப் கத்தீப் ஸாஹிபுகள், ஊர் விவகாரங்களுக்கு ஆக்ஞை யிடும் பொறுப்பாளர்களாக இருந்துங்கூட, இவர்களும் மேற்கண்ட எதிர்ப்பான முறையில் ஆக்ஞையிட்டு, நிக்காஹ்வுக்குப் பிறகு மண மகன் சார்பில் விருந்து வைக்கவேண்டிய தில்லை யென்றும், வெற்றிலை பாக்கோ, தேனீர் பிஸ்கெட்டோ கொடுத்து அனுப்பி விடும்படி, ஜமாஅத்தாருக்கு போதனை செய்து வருகிறார்கள். அது மட்டுமல்ல; இதற்கு மாறாக யாராவது பெரிய ஏற்பாட்டில் சமையல் செய்து விருந்து உணவு படைத்து 'தஃவத்து' செய்தால், அவர் களை ஜமாஅத்தை விட்டு நீக்கி விடுவோம் என்று பயமுறுத்தியும் வருகிறார்கள்.

ஜமாஅத்து என்னும் ஜனங்களை இப்படி நிர்ப்பந்தப்படுத்த கதீபு, காஜி, பட்டேல் முத்தவல்லிகளுக்கு மார்க்க அனுமதி

யுண்டா? விருந்து செய்வது 'இஸ்ராப்' என்னும் வீண் செலவா? இஸ்லாமிய ஷரீஅத்துப்படி 'வலீமா' என்றால் என்ன? வெறும் தேனீர் பிஸ்கெட் கொடுப்பதும் ஸுன்னத்தான வலீமா ஆகுமா? இதுபற்றி நம் இஸ்லாமிய ஷரீஅத்துப் பிரகாரம் விளக்கம் கொடுக்குமாறு வேண்டிக் கொள்கிறேன்.

## விடை

நிக்காஹ்வுக்குப் பிறகு மணமகன் சார்பாக 'வலீமா' செய்வது 'ஸுன்னத்தே முஅக்கதா' என்னும் கட்டாயமான நல்அமல் (நற்காரியம்) ஆகும் இது நபிகள் நாயகம் முஹம்மதுர் ரஸூலுல்லாஹி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுடைய திருச் சொல்லாலும், திருச் செயலாலும் ஸ்தாபிதமான ஸுன்னத் ஆகும். 'வலீமா' என்பதற்குப் பொருள்: நிக்காஹ்வுக்கு அழைக்கப்படும் விருந்தாளிகளுக்குப் பசி தீர உணவு அளிப்பது என்பதே யாகும்.

புகாரி ஹதீது கிரந்தத்தில் காணப்படும் ஒரு ரிவாயத்து: நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள், நாயகி ஹஜ்ரத் உம்முஸல்மா (ரலி) அவர்களையும், நாயகி ஹஜ்ரத் ஸபிய்யா (ரலி) அவர்களையும் திருமணம் (நிக்காஹ்) செய்து கொண்ட பிறகு முறைப்படி 'வலீமா' செய்தார்கள்.

திருநபித் தோழரான அப்துர்ரஹ்மான் பின் அவுப் (ரலி) அவர்கள் நிக்காஹ் செய்து கொண்ட 'போது, நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அன்னவரை நோக்கி "அவ்லிம், வலவ் பிஷாத்தின்" (அதாவது ஒரே ஓர் ஆடாவது அறுத்து 'வலீமா' விருந்துச் செய்வீராக) என்று கட்டளை யிட்டார்கள்:

வலீமா விருந்து அழைப்பை ஏற்றுக் கொள்வதும் சுன்னத்தான நற்காரியமே ஆகும்.

ஸஹீஹ் புகாரி ஹதீது கிரந்தத்தில் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அறிவிக்கும் ரிவாயத்தாவது:—நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள், எங்களை நோக்கி "இதா துஇய அஹதுக்கும் இலல் வலீமத்தி பல்யஃதிஹா" (அதாவது உங்களில் ஒருவர் வலீமா விருந்துக்கு அழைக்கப்பட்டால், அதற்கு இணங்கிச் செல்லுங்கள்) என்பதாகும்.

எனவே, காரண காரியமில்லாமல், வலீமா விருந்தழைப்பை நிராகரித்து விடுவதும், வலிமா விருந்து ஏற்பாட்டைத் தடுத்து விடுவதும் கூடாத காரியம் (விலக்கப்பட்ட காரியம்) ஆகும்.

மற்றொரு ஹதீது ஷரீபில் அருளப் பட்டிருப்பதாவது:—"எவனேனும் ஒருவன், (வலீமா) விருந்து அழைப்பை ஏற்றுக் கொள்ள வில்லையானால், அவன் அல்லாஹ்வுக்கும் ரஸூலுக்கும் மாறுபாடு செய்தவனாவான்" என்பதாகும். (கன்ஜுல் அஃமால்)

பணவசதி யுடையவர்கள், வலீமா விருந்து செய்வதற்கு குறைந்தபக்ஷ அளவு யாதெனில்: ஒரு ஆட்டையாவது அறுத்து, வழக்கம் போல் சாப்பாடு, ரொட்டி, உணவு சமைத்து உபசரிப்ப தாகும். இது பழங்கால வழக்கம். இக்காலவழக்கத்துக் கொப்ப புலவு, பிர்யாணி-அல்லது கறிச்சோறு சமைத்து, பந்தி அமர்த்தி விருந்து அளிப்பதும் வலீமாவேயாகும். ஆனால் ஏழை எளி யோர்கள், இவ்வளவு பணவசதி இல்லாதவர்களா யிருந்தால், இவர்கள், தங்களால் இயன்ற மட்டும் ஏதேனும் சமைத்தோ, சமைக்காமல் கடைப் பண்டங்களைக் கொண்டோ, விருந்தினர் களை உபசரிப்பது நேர்மையாகும். இந்த ஏழ்மை முறைப்படி தேனீர்—பிஸ்கெட் அளிப்பதோ, ஷர்பத், கலர்பானம் அளிப்பதோ, அல்லது பாதம் கற்கண்டு கஜூர்க்காய் கொடுத்து விடுவதோ போது மானதேயாகும். எனவே ஏதேனும் வலீமா செய்தே ஆக வேண் டும்.

நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள், நாயகி ஹஜ்ரத் உம்மு ஸல்மா (ரலி) அவர் களது திருமணத்தின் போது, 'ஷயிர்' என்னும் கோதுமை தானியத்தை கொண்டு (அரைத்து சமைத்து) வலீமா உணவு அளித்தார்கள். இன்னம், நாயகி ஹஜ்ரத் ஸபிய்யா (ரலி) அவர் களுடைய திருமணத்தின் போது கஜூர்க்காய், நெய், ரொட்டி, தயிர் முதலியன கொண்டு வலீமா விருந்து அளித்தார்கள்.

ஸஹீஹ் புகாரி ஹதீது கிரந்தத்தில் ஹஜ்ரத் அனஸ் (ரலி) அறிவிக்கும் ஒரு ரிவாயத்தாவது: நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள், நாயகி ஹஜ்ரத் ஜைனப் (ரலி) அவர்களுடைய நிக்காஹ்வின் போது செய்தது போன்று வலீமா விருந்து, வேறு எந்தப் பத்தினி (நாயகி) மார் களின் திருமணத்தின் போதும் செய்யவில்லை. (அப்போது நாயகம் (ஸல்) அவர்கள், ஆடு அறுத்து சமைத்து விருந்துபசாரம் செய் தார்கள்).

மேலும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், மற்றொரு பத்தி னியாரின் திருமணத்தின் போது இரண்டு 'மரக்கால்' கோதுமை கொண்டு (அரைத்து, சமைத்து) விருந்துபசாரம் செய்தார்கள். (இஆனத்துத் தாலிபீன், பத்ஹுல் முயீன், பிக்ஹு ஷாபிஈ; பிக்ஹு ஹனபி).

குறிப்பு:— வலீமா செய்வது ஹலாலான சம்பாதனையைக் கொண்டதாயிருக்க வேண்டும். ஹராமா—ஹலாலா என்ற சந்தேகத் துக் கிடமான பொருளைக் கொண்டும், வியக்தமான 'ஹராம்' பணத் தைக் கொண்டும் வலீமா செய்வது ஹராமான, கெட்ட காரியமா கும்.

இவ்வாறே பணவசதி இல்லாதவர் பந்து ஜனங்களின் திருப்திக்காகவோ, நிர்ப்பந்தத்துக்காகவோ, வீட்டையோ, சொத்தையோ அடமானம் வைத்துக் கடன் வாங்கி, வலீமா விருந்து செய்ய வேண்டிய அவசியமில்லை. வட்டிக்குப் பணம் கடன் வாங்கி வலீமா விருந்து செய்ய வேண்டிய அவசியமில்லை. இதெல்லாம் ஹராமான காரியமாகும்.

ஹலாலான சம்பாத்தியம் கொண்டு, இயன்ற மட்டும் எளிய முறையில் வலீமா செய்வது சிறப்பான காரியமாகும். இதில் பரக்கத்தும் நன்மையும் உண்டாகும்.

(பெண் வீட்டாரும் இதே ரீதியில்தான் ஹலாலான சம்பாதனை கொண்டு, கலியாண காரியங்களையும் விருந்து உபசாரங்களையும் செய்ய வேண்டும். இதில் பரக்கத்தும் நன்மையும் உண்டு.)

இங்ஙனம்
காஜி முஹம்மத் ஹபீபுல்லா சாஹிப்,
சென்னை நகர ஷரீஅத்து அதிகாரி,
19—ஜில்கஃதா,ஹி. 1380,

---


# மாயமாய் மறைந்த மங்கை

இது ஓர் அருமையான துப்பறியும் நாவல், திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்துள்ளது. இதில் ஒரு பெரிய பணக்காரன் விரோதிகளுக்குப் பயந்து தனக்கு ஆபத்து ஏதும் வாராமலிருக்க, பெயர் பெற்ற துப்பறியும் ஷம்ஸின் உதவியை நாட, ஷம்ஸ் அவ்வேலையின் நிமித்தம் அனுப்பிய ஏஜெண்ட் கொலையுண்டு, அந்தப் பணக்காரரும் காணமற் போய் விடுகின்றார். இதை ஷம்ஸ் விசாரிக்கச் செல்ல, அங்கு ஒரு மாசற்ற மங்கை மாயமாய் மறைந்த மர்மத்தையும், ஷம்ஸ் தனது அஸிஸ்டென்ட் சோடேவின் உதவியினால் சிறிதும் அஞ்சாமல் கொலைக் கூட்டத்தினடுவே துணிந்து சென்று மர்மங்களைக் கண்டு பிடித்து விளக்குகின்றார். இதைப் படிக்க ஆரம்பஞ் செய்வோர் கதை முழுவதையும் முடிக்காமல் புத்தகத்தை கீழ் வைக்க மாட்டார் என்பதில் ஐயமில்லை.

இதன் விலை ரூ. 0–52

கிடைக்குமிடம்:—
**ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,**
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

(70-வது பகுதி)

# திருக் குர்ஆன் : : : :

## : : : : சார சங்கிரஹம்

பல விஷயங்கள் பற்றிய பல ஆயத்துகள்.

(ரஷ்மத் பாகவி)

### மனிதர்ச் செயலை எழுதும் 'கிராமன்--காத்திபீன்'

(இறைவனுகிய) நாமே, மனிதரை (புதுமையாக) சிருஷ்டித்தோம். இன்னும் நாம் அவனுடைய ஹிருதயத்தில் உதிக்கும் எண்ணங்களையும் (சமுசயங்களையும்) நன்கு அறிகின்ருேம். மேலும் நாம், அவனது பிடரி நரம்பையும் விட மிக சமீபத்தில் (நெருங்கி) யிருக்கின்ருேம். (எம்மை விட்டும் ஒரு விஷயமும் மறைந்தில்லை.) இன்னும் இரண்டு மலக்குகள் (மனிதர்ச் செயல் அனைத்தையும்) எழுத்து வடிவில் அமைப்பவர்களாய் இருந்து, அவர்கள் எழுதிக் கொண்டே இருக்கிருர்கள். ஒருவர் வலது (தோள்) புறம் அமர்ந்திருக்கிருர். மற்றவர் இடது (தோள்) புறம் (அமர்ந்திருக்கிருர்.) எனவே, மனிதன் ஏதேனுமொரு சொல்லை வாயினுல் சொல்லி, அது அவர்களுக்குத் தெரியாமல் போய்விடுமென்பது சாத்தியமில்லை. (அனைத்தையும் அவர்கள் 'ரிக்கார்டு' செய்து விடுகிருர்கள்.)

(ஜுஸு: ஹாமீம்: ஸூரா: காப்: ருகூ: 2)

### ஒட்டுக் கேட்டு கோள் சொல்லித் திரிபவர்கள்.

நபியே, அந்த (கோள் சொல்லிப்) பேர்வழிகளைப் பற்றி (யோசித்துப்) பார்த்தீரா? 'ஒட்டுக் கேட்டு கோள் சொல்லித் திரியவேண்டாம்' என்று நீவிர் அவர்களைத் தடுத்து (கண்டித்து) இருந்தும் அவர்கள், விலக்கப்பட்ட (தீய) காரியத்தையே மீண்டும் மீண்டும் செய்து கொண்டிருக்கிருர்கள். இவர்கள் தங்கள் பாவத்தை அதிகமாக்கிக் கொள்கிருர்கள்: (அல்லாஹ் உடைய) ரஸூலுக்கு எதிரிடையாக, ஒட்டுக் கேட்டுக் கொள் சொல்லித் திரிகிருர்கள்.

(ஜுஸு: கத் ஸமிஅல்லாஹ்: ஸூரா: முஜாதிலா: ருகூ:2)

### அல்லாஹ் நாடினுலன்றி யாரும் கெடுக்க முடியாது.

ஈமான் கொண்ட (முஸ்லிமான)வர்களே, (ஒட்டுக் கேட்டு) கோள் சொல்வதைக் கொண்டு பாவத்தை அதிகமாக்கிக் கொள்ளா

தீர்கள். அல்லாஹ்வுடைய ரஸூலுக்கு மாறுபாடாக, (கண்டதை கேட்டதை மாற்றிக்கூறி) வதந்தியைப் பரத்தாதீர்கள், ஆனால், பக்தி ஒழுக்கத்திற்காக (தக்வாவுக்காக) அப்படிச் செய்தீர்களாயின் அது பாதகமில்லை. (காதால் கேட்ட) சன்மார்க்க விஷயங்களைப் பிறருக்குச் சொல்வது பாதகமில்லை. எனவே (எந்த நிலைமையிலும்) அல்லாஹ்வுக்குப் பயந்து கொண்டிருங்கள். இறுதியில் நீங்கள் அவன் சமுகத்தில் தான் கொண்டுபோய் சேர்க்கப்படுவீர்கள். கண்டொன்று (கோள்) சொல்வதானது, ஷைத்தானுடைய காரியமாகும் இதனால் நல்ல முஸ்லிம்கள் பெரிதும் மனம் புண்பட்டு வருந்துவார்கள். அல்லாஹ் தஆலா நாடினாலல்லாமல், நல்ல முஸ்லிம் யாருக்கும், எவரும் தீங்கு செய்ய முடியாது. எனவே முஸ்லிம்கள் எப்போதும் (யாருக்கும் பயப்படாமல்) அல்லாஹ்வின் மீதே பூரண நம்பிக்கை வைப்பார்களாக.

(ஜுஸ்உ: கத்ஸமிஅல்லாஹு; ஸூரா: முஜாதிலா; ருகூ:2)

## உங்களை எதிர்க்காத காபிர்களோடு சேர்ந்து வாழுங்கள்.

(தற்போது) உங்களுக்கு விரோதிகளாயிருக்கும் காபிர்களுக்கும் உங்களுக்குமிடையில், நட்பை உண்டாக்கி வைக்க அல்லாஹு தஆலா போதுமானவனாக இருக்கிறான். சகல காரியங்கள் மீதும் அல்லாஹ் மகா சக்தி உடையவனாக இருக்கிறான். இன்னும் அல்லாஹ் மிகவும் அருளாளனாகவும் இருக்கிறான். எனவே, உங்களை எதிர்த்துப் போரிடாத காபிர்களுடனும், உங்களை (உங்கள்) வீடுகளை விட்டும் துரத்தாத அன்னியர்களுடனும் நீங்கள் பரஸ்பரம் சேர்ந்து வாழுவீர்களாக. இதைப் பற்றி அல்லாஹு தஆலா உங்களை விலக்கவில்லை. எனவே நீங்கள் அவர்களுக்கு அனுகூலம் செய்வதிலும் அவர்களோடு நேர்மையாக பழகுவதிலும் உங்களுக்குப் பூரண சுதந்தரமுண்டு. ஏனெனின், அல்லாஹு (தஆலா) நியாயத்தை விரும்புபவர்களை (அவர்கள் யாராயினும்) விரும்புகிறவனாக இருக்கின்றான். இறுதியாய் அல்லாஹ் (தஆலா) உங்களை யாரை விட்டும் ஒதுங்கி யிருக்கும்படி கட்டளை யிடுகிறானென்றால்; உங்களுடன் (இஸ்லாத்துக்கு விரோதமாய்) போரிட்டவர்களுடனும், உங்கள் வீடுவாசல்களை விட்டு (ஊரை விட்டு) உங்களை விரட்டியவர்களுடனும், விரட்டுவதற்கு உடந்தையாக இருந்த (தலை)வர்களுடனும் நீங்கள் சேர்ந்திருக்கக்கூடாது என்பதேயாகும். எனவே, இப்படிப்பட்ட துரோகிகளுடன் (குரோத குணமுள்ளவர்களுடன்) நட்புறவு வைத்துக் கொண்டால், அவர்கள் அநியாயக்காரர்கள் (சமூகத் துரோகிகள்) ஆவார்கள்.

(ஜுஸ்உ:கத்ஸமிஅல்லாஹ்; ஸூரா: மும்தஹினா: ருகூ: 2)

## பிடிபட்ட காபிர்ப் பெண்களைத் திரும்ப அனுப்பி விடுங்கள்.

(போர்க்களத்தில் வெற்றி பெற்ற) முஸ்லிம்களே, நீங்கள் (உங்கள் கையில் பிடிபட்ட) காபிரான பெண்கள் மீது உங்கள் ஆதிக்கத்தை செலுத்தாதீர்கள். (அவர்களை உரியவர்களிடம் திரும்ப அனுப்பி விடுங்கள்.) அவர்களுக்காக நீங்கள் ஏதேனும் (பணம் காசு) செலவழித்திருந்தால், அதை (உரியவர்களான காபிர்களிடம்) கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள். இதே விதமாய் (காபிர்களிடம் பிடிபட்ட முஸ்லிம் பெண்களை விடுவிக்கும் போது) அவர்கள் செலவு செய்திருந்ததை, அவர்களும் உங்களிடம் கேட்டுப் பெற்றுக் கொள்ளட்டும். இதெல்லாம் அல்லாஹ் உடைய கட்டளைகளாகும்; இதனை அவன் உங்களுக்குத் தெளிவாக எடுத்துரைக்கிறான். அல்லாஹுதஆலா, சகலத்தையும் அறிபவனாகவும் விவேகமுடையவனாகவும் இருக்கின்றான்.

(ஜுஸ்: கத்ஸமிஅல்லாஹ் ஸூரா: மும்தஹினா; ருகூ 2)

## கியாமத்தின் கோரமும், நரக வேதனைகளும்.

(காபிர்களில்) ஒரு சிலர், (தெய்வ நம்பிக்கையின்றி) 'உங்கள் இறைவனின் வேதனை எப்போது வரும்? (கியாமத்து எப்போது உண்டாகும்?)' என்று கேட்கிறார்கள்; (இவர்கள் வேதனையை எதிர் நோக்குகிறார்கள்.) இறைவனாகிய எம்முடைய தண்டனை (அதாபு) கட்டாயம் வந்தே தீரும். இது காபிர்களுக்கு மட்டும் உரியதாகும். இதிலிருந்து அவர்களை யாரும் காப்பாற்ற முடியாது.

வானத்தின் (கோளங்கள் சஞ்சரிக்கும்) பாதைகளை (ஏணிகளை) சிருஷ்டித்த அதிபதியான (சகலமும் வல்ல) அல்லாஹு (தஆலாவின்) புறத்திலிருந்து, இவ்வேதனை (அதாபு) உண்டாகும். அந்தப் பாதைகள் வழியே (இறைசக்திகளான) மலக்குகளும் அந்தப் பக்கம் ஏறிச் செல்கிறார்கள்.

அந்த வேதனை எந்த நாளில் நிகழுமென்றால், அதன் கால அளவு ஐம்பதினாயிரம் ஆண்டுகளைக் கொண்டதாகும். அதுவே கியாமத்து நாளுமாகும்.

நபியே நீர், நல்ல விதமாக (நிம்மதியாகப்) பொறுமையோடு இருந்துகொள்வீராக. காபிர்களாகிய (நம்பிக்கை யற்றவர்களாகிய) அந்த ஜனங்களோ, கியாமத்துநாள் ரொம்ப (ரொம்ப) தூரத்திலிருக்கிறது என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். (அது நிகழாது என்றும் கூறித் திரிகின்றனர்.) ஆனால், எமது ஆற்றலில் இது மிகவும் நெருங்கிய (சுலபமான) விஷயமாகும்.

187084

(கோரமான) கியாமத்து நாள் நிகழுமே அந்த நாளில் வான (கோள) மானது, உருகிவழியும் செம்புக்குழம்பு போல் ஆகிவிடும். மலைகள் இடம் பெயர்ந்து (தூள்தூளாகிப் பறந்து) கொண்டிருக்கும் போது, விதவிதமான வர்ணமேற்றிய பஞ்சு நூல்களைப் போல் காணப்படும்.

அந்நாளில் (எல்லோரும் திடுக்கிட்டு), ஒருவர் மற்றவரைப்பற்றி கேட்காதவராய் (லக்ஷியம் செய்யாதவராய்)இருப்பர். எனினும் அந்நாளில் (கியாமத்து நிகழ்ச்சியைக் கண்டு காபிர்களில் செல்வந்தர்களாயிருப்பவர்கள்), தங்களுக்கு அறிமுகமானவர்களை நோக்கி, தங்கள் சொத்து செல்வங்களை (ஈடாகத் தருவதாக) காட்டுவார்கள். அந்தக் கொடுமையான நாளின் வேதனையை விட்டும் காப்பாற்றினால் (அதற்கு ஈடாக சொத்து செல்வம் மட்டுமில்லை.) தங்கள் (செல்வக்) குமாரன், (அருமை) மனைவி, தன் சகோதரன், இன்னும் சகல உறவினரையும், தான் குடியிருக்கும் (மாளிகையான—பங்களாவான) வீட்டையும், இப்பூமியில் (தன் ஆதிக்கத்தினுள்) உள்ள எல்லா பிரஜைகளையுமே (ஈடாக) கொடுத்து விடுவதாகவும் கூறுவார்கள்- இவை தங்களை வேதனையை விட்டும் காப்பாற்றி விடும் என்று அவர்கள் நம்புவார்கள். ஆனால், அச்சங்கடம் ஒரு போதும் நிவர்த்தியாக மாட்டாது. (ஆண்டவனே காப்பானாக.)

(காபிர்களுக்கு உறைவிடமான) நரகத்தின், மிக உஷ்ணமான நெருப்பு எப்படிப்பட்ட தாயிருக்கு மென்றால்: அதன் அருகில் சென்றதும் முகத்தின் தோல் கரிந்து (சதை பிய்ந்து) விழுந்து விடும். அந்த நரகத் தீ (நாக்கை நீட்டிக் கொண்டு) தீய மனிதர்களைத் தன் பக்கம் கூவி அழைக்கும்; எவன் (உலகில் சன்மார்க்கத்தை மறந்து) வயிற்றை நிரப்பிக் கொண்டானோ, (ஏழைகளை விட்டும்) எவன் முகத்தை திருப்பிக் கொண்டானோ, எவன் சொத்து செல்வம் தேடி (சாகும்போது) விட்டுச் சென்றானோ, (இறைவன் பாதையில் தர்மத்துக்காக) செலவு செய்யாமல் சேமித்து வைத்தானோ, அவனையே (நாகம் 'வா, வா' என்று,தீ நாக்கை நீட்டி கூவி இழுத்துக் கொள்ளும்).

உண்மையாகவே, மனிதனானவன்—இயற்கையால் பலஹீனமானவனாகவே அமைந்திருக்கிறான். (கோழையாகவும் இருக்கிறான்.) கஷ்டம் வந்து தாக்கும் போது, அமைதி குலைந்து உன்மத்தனாகிறான். (அக்கஷ்டம் நீங்கி) நன்மை வந்தெய்தும்போது, (ஆண்டவனையும் புண்ணியத்தையும் மறந்து) உலோபியாய் விடுகிறான்.

(ஜுஸுஉ: தபாரகல்லதீ: ஸூரா: மஆரிஜ், ருகூ—1.)

# நாயனின் சிறப்பு

**அ. அப்துல் வஹாப்.**

படம்: பிள்ளைக்கனியமுது. இசை: ஏர்முனைக்கு நேர் இங்கு.

நாயனுக்கு நேர் சொல்ல எவருமே இல்லே—அவன்
நாட்டமிழந்த பொருள்களே உலகிலே இல்லே.

1. ஞாலம் தன்னை அழகாய் சமைத்து வெளியில் விடுத்தோனும்—
இங்கு ஞாயிற் திங்கள் நாளும் வானில் இயங்கச் செய்தோனும்—
தண்ணீரில் வாழா மீன்கள் உயரே மின்னச் செய்தோனும்—
தறித்தே நில்லாத கூட்டில் காற்றை ஓட்டும் முதல்வனே. (நாய)

2. மண்ணுலகும் விண்ணுலகும் நிலையவனாலே—அது
மாண்புக் கொண்டு சுழலுகின்ற செயலவனாலே—இங்கு
நால் வகையாய் இயங்கு முயிர்கள் நாட்டில் தோற்றியே—அதற்கு
நல்லுணவை ஈந்தருள்வோன் நம் மிறையோனே. (நாய)

3. ஏதுங்குற்றங் காண இயலா இஸ்லாம் மார்க்கத்தை—பாரில்
ஏற்படுத்த நபியை அரபி நாட்டில் தோற்றினேன்—இந்த
பார் புகழும் பல்லுயிரைக் காக்கும் உத்தமன்—சிறு
பாலர் முதல் மேலோர் வணங்கும் பரமனவனுச்சே. (நாய)

4. ஈடு இணையில்லாத நமது இஸ்லாம் வேதமாம்—அந்த
இறைவன் நமக்கே ஈந்திட்டதோர் புருக்கான் மறையதாம்—இந்த
மாந்தர்களின் மனஇருளை போக்கும் மறையதாம்—நாம்
மகிழ்ந்து ஓதி உணர்ந்து நடத்தல் செய்யும் முறையதாம். (நாய)

5. ஆதியந்தம் இல்லானுக்கு இணையாக நானே—இங்கு
ஓதியா வர்க்கும் உணர்த்தல் கொடிய செயலன்றோ—பெரும்
குற்றம் யாவும் பொருத்திடும் இறைவன் இது ஒன்றே
சற்றும் பொறுணுகிடுவான் இதை யறி நன்றே. (நாய)

6. ஆதிமுதல்வனுகிய நம் வேத இறைவற்கே—என்றும்
நீதி முனையில் நிற்கும் நமது நிலை பெற்றோனுக்கே—ஏதும்
அறியாப் பொருள் உலகிலில்லை அறிந்திடுவாயே—சிறியோன்
அப்துல் வஹாப் கூற்றை நன்கு தெரிந்திடுவாயே. (நாய)

(1) வெளியில்—வான வெளியில்.
(2) நால் வகையாய் இயங்குதல்—ஊருதல், தாவுதல், [நடத்தல், பறத்தல்.
(1) தண்ணீரில் வாழா மீன்கள்—நட்சத்திரம்.

---

# தப்ஸீறுல் ஹமீத் பீ தப்ஸீரில் குர்ஆனில் மஜீத்

நமது நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருளப்பட்ட திருக் குர்ஆனே உலக மக்கள் அனைவருக்கும் பொது வேத மாகவும், இஸ்லாம் மார்க்கத்திற்கு ஆதாரமாகவும் இருந்து வருகிறது. முஸ்லிம்கள் இஸ்லாம் மதத்திற்கு ஆதாரமா யுள்ள திருக்குர்ஆனின் கட்டளைகளையும் அரிய போதனை களையும் தெரிந்து கொள்வது அவசியமாகும். இஃது திருக்குர் ஆனின் தப்ஸீரை தமிழ் பாஷையில் ஸுன்னத்து வல் ஜமாஅத்தின் உலமாக்களாலும் இமாம்களாலும் எழுதப் பட்ட தப்ஸீர்களை ஆதாரமாகக் கொண்டு, எழுதப்பட்டது.

இந்த தப்ஸீரில் குர்ஆன் ஆயத்துகளை அறபியில் அழ காக எழுதி போட்டோபிளாக் செய்யப்பட்டு தனித்தனியாக ஆங்காங்கு அமைத்தும் அதன் கீழ் சரியான தர்ஜுமாவும், தப்ஸீர் என்னும் விரிவுரையும், வியாக்யானமும், ஷஃனு நுஸூல் என்னும் ஒவ்வொரு ஆயத்தும் இறங்கிய காரணங் களும், அதற்கேற்ப ஹதீது, ரிவாயத்து, ஹிக்மத்து, பாயிதா, கிஸ்ஸா, அஜீபா முதலிய அரும் பெரும் ஆதாரங்களும் ஒருங்கே சேர்த்து அமைக்கப் பெற்றிருக்கின்றன.

**முதல் பாகம்:** ஸூறத்து பாத்திஹா—பகருவி லிருந்து ஸூறத்துன்னிஸா முடிய (ஒரு மன்ஸில்) 5½ ஜுஸு வரை — விலை ரூ. 10

**இரண்டாம் பாகம்:** ஸூறத்துல் மாயிதா முதல் ஸூறத்துத் தவ்பா முடிய — விலை ரூ. 10

**மூன்றும் பாகம்:** ஸூரே யூனுஸ் முதல் ஸூறத்துக் கஹ்ல் முடிய 7-ஸூறுக்களின் தப்ஸீர் — விலை ரூ. 10

**நான்காம் பாகம்:** ஸூரத்துல் இஸ்ராஉ முதல் ஸூறத்து நூர் முடிய 8-ஸூராக்களின் தப்ஸீர் விலை ரூ. 10

**ஐந்தாம் பாகம்:** ஸூறத்து புர்க்கான் முதல் ஸூறத்து யாஸீன் முடிய 12-ஸூராக்கள். — விலை ரூ. 12

**ஆறும் பாகம்:** ஸூறத்து ஸாப்பாத் முதல் ஸூறத்து ஹுஜ்ராத் முடிய 13-ஸூராக்கள். — விலை ரூ 12

**ஏழாம் பாகம்:** சூறே காப் முதல் ஸூறத்து நாஸ் வரை 41-ஸூறுக்கள் — விலை ரூ. 16

---

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# ஹஜ்ரத் 'க்வாஜா' முஈனுத்தீன் சிஷ்தி (ரஹ்) அவர்கள் ஜீவிய சரிதை.

(டி. எப். ரஹ்மத்துல்லாஹ்–மஆலி சாஹிப் (பாகவி)

## 17—ம் பாகம்

### அஜய்பாலின் மான் தோல் ஆசனம்

பிரபல மந்திரவாதியான அஜய்பால், தன்னுடைய பயங்கர சாதுர்யமான மாயா ஜாலங்களைச் செய்து காட்டியும், பயனில்லாமல் போய் விட்டது.

ஆத்மார்த்த ஞானசக்தி படைத்தவர்கள் முன், உலக சம்பந்தமான மாயாஜாலங்கள் என்ன செய்ய முடியும்? தன்னுடைய சாதுர்யங்கள் ஒன்றும் பயன்படாமல் போகவே, அஜய்பால் பயந்து நடுங்கி விட்டான். எனினும் அவன் தனக்குத் தெரிந்த மற்றொரு மகா மாயாஜாலத்தையும் செய்து பார்த்து விடுவதென்று முடிவு செய்தான்.

'மிருகச் சாலா' என்றொரு மான் தோல் ஆசனம் அவனிடம் இருந்தது. அதை அவன் மந்திரம் சொல்லி எறிந்தான். அது தரையில் படாமல், அந்தரத்தில் பறந்து வந்தது. அதில் அவன் அமர்ந்து ஆகாயத்தில் பறக்கலானான்.

இதை எதிர்ப்பதற்காக, நமது ஞானக் குரு ஹஜ்ரத் க்வாஜா சாஹிப் அவர்கள், தமது பாதக் குறடாகிய கால்கட்டையை கழற்றி ஏவி விட்டார்கள். உடனே இதுவும் ஆகாயத்தில் அந்தரமாகப் பறந்து, அந்த மாய மான் தோல் மீது அமர்ந்து அமுக்கியது. இதனால், ஆகாயத்தில் அந்தரமாய் பறந்த மான்தோல் ஆசனம் மடங்கிச் சுருண்டு பொத்தென்று தரையில் விழுந்தது.

பிறகு அந்த பாதக் குறடு பறந்து போய் அஜய்பாலின் சிரசு மீது தாக்கத் தொடங்கியது. அவனும் தரையில் வந்து வீழ்ந்தான்.

அஜய்பால், கையெடுத்துக் கும்பிட்டு ஹஜ்ரத் க்வாஜா சாஹிபிடம் பணிந்து, தன் தோல்வியை ஒப்புக்கொண்டான்.

### அஜய் பால் முஸ்லிமானான்.

அஜய்பாலுடைய மனதில், பயத்துக்குப் பதிலாக, ஹஜ்ரத் க்வாஜா சாஹிபிடம் பக்தியும் மரியாதையும் ஏற்பட்டது. இதை

ஹஜ்ரத் அவர்கள் தெரிந்து கொண்டு, மேன் மேலும் அவனைக் கருணைக் கண் கொண்டு பார்த்து, தம்முடைய ரூஹானியத் என்னும் ஞானப்பாலைப் பொழிந்தார்கள். இதனால் அவனது குப்ரியத் என்னும் இருள் நீங்கி, ஞானச்சுடர் என்னும் நல்லொளி உதயமாயிற்று.

உடனே அஜய்பால், முற்றும் மனம் மாறின வனாகி, கையெடுத்து சலாம் செய்து, தலைகுனிந்து வந்து ஹஜ்ரத் க்வாஜா சாஹிப் அவர்களின் பாதங்களைப் பிடித்துக் கொண்டு, தனக்கு சன்மார்க்கம் காட்டியருளும்படி வேண்டிக் கொண்டான். அறியாமல் செய்த தவற்றை மன்னிக்கும் படியும், தன் மீது கருணை காட்டும்படியும் கோரிக்கொண்டான்.

எனவே, ஹஜ்ரத் க்வாஜா சாஹிபவர்கள், அந்த நல்ல மனிதனாகிய அஜய்பாலை அருகில், அழைத்து அவனது சிரசு மீது அன்புக் கைவைத்து ஆசீர் மொழி கூறி 'உனக்கு அல்லாஹு தஆலா ஹிதாயத்தை கொடுப்பானாக' என்று துஆச் செய்தார்கள்.

எனவே அஜய்பால், "நான் இன்றுமுதல் தங்கள் தாஸனாகி விட்டேன். என்னை ஆட்கொண்டருள வேண்டும். தயவு செய்து என்னை உங்கள் சத்திய மார்க்கமாகிய இஸ்லாத்தில் சேர்த்துக் கொள்ளுங்கள்" என்று வேண்டிக் கொண்டான்.

அதன்பின் ஹஜ்ரத் க்வாஜா முஈனுத்தீன் சிஷ்த்தி (றஹ்) அவர்கள், அவனுக்கு இஸ்லாமியத் திருக் கலிமா சொல்லிக் கொடுத்து, தீனுல் இஸ்லாத்தில் சேர்த்துக் கொண்டார்கள். நவ் முஸ்லிமாகிய அவருக்கு 'பண்டித் அப்துல்லா' என்று பெயர் வைத்தார்கள்.

## ராஜாவின் திக்பிரமை

நகரத்தின் பெரிய கோயிலின் பூஜாரியான அரசாங்கப் பிரதமர் மஹந்த் ராமதேவரும், ஹிந்துஸ்தானத்துப் பிரபல மாயா ஜாலக்காரரான அஜய்பாலும், முஸ்லிம் மகானான க்வாஜா சாஹிபிடம் சரணு கதியடைந்து முஸ்லிமாகி விட்ட வரலாறு, ஊரெங்கும் நாடெங்கும் பரவி மக்களைப் பெரும் வியப்பில் ஆழ்த்தியது.

இந்த சமாச்சாரம் இறுதியாக, அஜ்மீர் ஊரையாளும் அதிபதியான ராஜா பிரித்விராஜாவுக்கும் தெரிய வந்தது. ராஜாவும் நமது க்வாஜா சாஹிபை 'பகீரே காமில்' (பரிபூரணத்துவம் பெற்ற மகான்) என்று, தன் தர்பாரில் வாயாரப் புகழ்ந்தான். இத்துடன் தன்னுடைய முக்கிய இரு ஆட்களைக் கவர்ந்து மனதை மாற்றி

இஸ்லாத்தில் சேர்த்துக் கொண்ட தற்காக, க்வாஜா சாஹிபை எதிர்க்கவும் அவன் துணிவு கொள்ள வில்லை. இனி இதற்கு என்ன செய்வதென்று தெளிவற்ற சிந்தனையில் ஆழ்ந்தான். இவ்வாறே அஜ்மீர் வாசிகளான மற்ற ஜனங்களும் திக்பிரமையில் ஆழ்ந்திருந்தார்கள்.

## க்வாஜா சாஹிபின் இடம் மாற்றம்

நவ்முஸ்லிம் பிரமுகர்களான பண்டித் அப்துல்லாவும், மஹந்த ஷாதியும் வேண்டிக் கொண்ட தன் பேரில், நமது ஹஜ்ரத் க்வாஜா சாஹிபவர்கள், அந்த ஏரிக்கரைப் பிரதேசத்தை விட்டு, வேறு இடத்துக்கு இடம் மாற்றிக் கொண்டார்கள். அதாவது, பொது இடத்தில் இருப்பது உசிதமல்ல வென்று சொல்லி, மஹந்து ஷாதி, தனக்கு சொந்த மான ஓர் இடத்துக்கு அழைத்துக் கொண்டு போனார்.

மஹந்து ஷாதிக்கு சொந்தமான இடம்தான், இன்று அஜ்மிரில் பெரிய தர்காவுள்ள ஸ்தலமாக இருந்து வருகிற பொது ஸ்தலமாகும்.

அப்போது, நமது ஹஜ்ரத் க்வாஜா சாஹிப் அவர்கள் போய் தங்கியபோது, முதல் முதல் சமையல் விடுதியை ஏற்படுத்தினார்கள். அதைப் பிறகு 'பாவர்ச்சீகானா' என்றும் பண்டார்க்கானா என்றும் மக்கள் சொல்லி வந்தார்கள்.

இந்தப் புது இடத்தில், தாங்களும் மற்றும் நவ்முஸ்லிம் சிஷ்யர்களும் தங்கி யிருப்பதற்கு வீடுவசதிகளும் செய்யப்பட்டன.

## இஸ்லாமியப் பிரசாரமும் ராஜாவின் முரண்பாடும்

அதன்பின், இஸ்லாமியப் பிரசாரம் தீவிரமாக நடை பெற்று வந்தது. ஜனங்கள் ஆயிரக் கணக்கில் வந்து கூடி, பிரயோஜனம் அடையலாயினர். ஹஜ்ரத் காஜா சாஹிபின் ஞானப் பிரசங்கங்களை கேட்டு இன்புறுவதற்காக வெகு தூரத்திலிருந்து ஜனங்கள் வரத் தொடங்கினார்கள்.

இனி ஒழுங்கான முறையில் இஸ்லாமியத் தப்லீக் (பிரசாரம்) நடை பெறுவதா யிற்று. ஹஜ்ரத் அவர்கள், தலைமை ஸ்தாபனம் ஒன்றை ஏற்படுத்திக் கொண்டு, ஊர் பிரமுகர்களுக்கு இஸ்லாத்தின் பெயரால் அழைப்பு அனுப்பி வந்தார்கள். அநேகர் இந்த அழைப்புக்குப் பதில் அளித்து, தீனுல் இஸ்லாத்தில் சேர்ந்து கொண்டனர்.

இதே முறையில் ஹஜ்ரத் க்வாஜா சாஹிப் அவர்கள், ஊராளும் அரசராகிய பிரித்விராஜாவுக்கும் இஸ்லாத்தின் பெயரால் 'தஃ

வத்தே இஸ்லாம், அனுப்பினார்கள். ஆனால் துரதிருஷ்ட சாலியான ராஜா பிரித்விராஜ் அவ்வழைப்பை ஏற்றுக் கொள்ள வில்லை. ஏற்றுக் கொள்ளாதது மட்டும் மில்லை, அந்த அழைப்பை உதாசீனம் செய்து நிராகரித்து விட்டான். அத்துடன் ஹஜ்ரத் க்வாஜா சாஹிபவர்களை, சில பல கடுமையான சொற்களைக்கொண்டு தகாத முறையில் தாக்கிப் பேசி விட்டான்.

இந்த வஞ் சொல் செய்தி, ஹஜ்ரத் க்வாஜா சாஹிப் அவர்களுக்குத் தெரியவந்தது. அதற்கு அவர்கள் சொன்ன பதில் மொழியாவது:—

“அந்தப் பாக்கியங் கெட்டவன் (ராஜா), வஹ்தத்துடைய அழைப்பை ஏற்றுக் கொண்டு ஈமான் கொள்ள வில்லை. காபிராகவே இருந்து மாண்டு போக விரும்பி விட்டான். சரி, அவன் அதே குப்ரியத்தில் கிடந்து போகட்டும். அவனுக்கு அழிவு காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. அதிசீக்கிரம், இஸ்லாமிய அரசர்களுடைய கையாலேயே அவன் சீரழிந்து, ராஜ்யம் சிதைந்து அழிந் தொழிந்து போவான்; கடைசியில் நரகத்திற்கே போய்ச் சேர்வான்” என்பதாகும்.

அதன் பிறகு, ராஜாவின் எதிர்ப்பு பலப்பட்டது. எனினும், ஹஜ்ரத் க்வாஜா சாஹிபை ஒன்றும் செய்யமுடிய வில்லை. பிறகு ராஜா பிரித்விராஜ், சில உளவாளிகளை அனுப்பி, இங்கு நடக்கும் சமாசாரங்களை இரகசியமாகத் தெரிந்து கொள்வதற்கும் முற்பட்டுத் தோல்வியை அடைந்தான்.

ராஜ அரண்மனையைச் சேர்ந்த ஊழியர்களில் ஒருவன், ஹஜ்ரத் க்வாஜா சாஹிபுடைய சமுகத்திற்கு வந்து “நான் தங்களுடைய சிஷ்யர்களில் (முரீதுகளில்) ஒருவனாகச் சேர்ந்து கொள்கிறேன்” என்று சொன்னான். அவன் மீது ஹஜ்ரத் அவர்களுக்கு சந்தேகம் ஏற்பட்டது. எனவே, அவனை ஏற்றுக் கொள்ளாமல் திருப்பி அனுப்பி விட்டார்கள்.

இதனாலும் அரசன் பிரித்விராஜ் அவமானப்பட்டு, ஆத்திரங் கொண்டான். அவனது ஆத்திரம் அவனுக்கே அழிவு காலமாய் முடிந்தது. இந்த விபரத்தை சுல்தானே ஷஹாபுத்தீன் கோரி அவர்களுடைய சரித்திர வரலாற்றுடன் இனி அறியலாம்.

(தொடரும்)

Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

# கஸஸுல் அன்பியா

1960-வது வருஷத்திய திருத்தி யமைக்கப்பட்ட பதிப்பு.

## நபிமார்களுடைய சரித்திரங்கள் அடங்கியது

இதில் முதலாவது அல்லாஹு தஆலா ஆதியாய் படைத்த படைப்புகளைப் பற்றியும், 1-வது பாவா ஆதம் அலைஹிஸ்ஸலாம், 2-வது ஷீது அலைஹிஸ்ஸலாம், 3-வது இத்ரீஸ் அலைஹிஸ்ஸலாம், 4-வது ஹாறூத் மாறூத் தென்னும் இரண்டு மலக்குகள், 5-வது நூஹ் அலைஹிஸ்ஸலாம், 6-வது ஹூது அலைஹிஸ்ஸலாம், 7-வது ஷத்தாது கட்டின இரமதாத்துல் இமாதென்கிற சுவர்க்கம், 8-வது ஸாலிஹ் அலைஹிஸ்ஸலாம், 9-வது இப்றூஹீம் அலைஹிஸ்ஸலாம், 10-வது இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம், 11-வது இஸ்ஹாக் அலைஹிஸ்ஸலாம், 12-வது யஃகூபு அலைஹிஸ்ஸலாம், 13-வது யூஸுப் அலைஹிஸ்ஸலாம், 14-வது ஐயூபு அலைஹிஸ்ஸலாம், 15-வது ஸில்கிப்லி அலைஹிஸ்ஸலாம், 16-வது ஷுஐபு அலைஹிஸ்ஸலாம், 17-வது மூஸா அலைஹிஸ்ஸலாம், 18-வது கிழுறு அலைஹிஸ்ஸலாம், 19-வது இல்யாஸ் அலைஹிஸ்ஸலாம், 20-வது அல்யஸஉ அலைஹிஸ்ஸலாம், 21-வது அஷ்மவீல் அலைஹிஸ்ஸலாம், 22-வது தாவூத் அலைஹிஸ்ஸலாம், 23-வது ஸுலைமான் அலைஹிஸ்ஸலாம், 24-வது யூனுஸ் அலைஹிஸ்ஸலாம், 25-வது ஈஸா அலைஹிஸ்ஸலாம், 26-வது ஜக்கரியா அலைஹிஸ்ஸலாம், 27-வது யஹ்யா அலைஹிஸ்ஸலாம், 28-வது பீவி மரியம் அலைஹிஸ்ஸலாம் ஆக இவ்வளவு நபிமார்களுடைய கிஸ்ஸாக்களடங்கி யிருக்கின்றன. இந்தக் கிஸ்ஸாக்கள் யாவும் குர்ஆனில் பிரஸ்தாபிக்கப்பட்டவைகளாகும். இதை ஒவ்வொரு முஸ்லிமும் வாங்கிப் படிக்க வேண்டியது அவசியம்.

கிளேஸ் காகிதம் கலிகோ பைன்டு விலை ரூ. 9–60

ஷை அறபுத் தமிழ் ரவ்லதுல் அஸ்பியா-பீ-கஸஸுல் அன்பியா முதல் பாகம் றப்பு கலிகோ பைண்டு ரூ. 6–00

ஷை இரண்டாவது பாகம் ரூ. 7–00

ஷை மூன்ருவது பாகம் ரூ. 5–00

---

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# தப்ஸீறுல் ஹமீத் பீ தப்ஸீரில் குர்ஆனில் மஜீத்.

7-வது (கடைசி) பாகம்

**வெளிவந்து விட்டது.**

இதில் 26-வது ஜுஸுவில் 50-வது ஸூரா முதல், 30-வது ஜுஸுவில் கடைசி 114-வது ஸூரா முடிய 65 ஸூராக்களின் தப்ஸீர் அடங்கியது. 1204 பக்கங்கள் கொண்டது.

கிளேஸ் காகிதம் கலிகோ பைண்டு விலை ரூ. 16

தக்கலை பீர் முஹம்மது ஒலியுல்லா அவர்கள்
திருவாய் மலர்ந்தருளிய

# ஞானக் கோர்வை

இதில் மேற்படி ஒலி நாயகமவர்கள் அருளிய பிஸ்மில் குறம், ஞானப்பால், ஞானப்பூட்டு, ஞானப் புகழ்ச்சி, ஞான மணிமாலை, ஞானக்குறம், ஞானரத்தின குறவஞ்சி, ஞான ஆனந்தக் களிப்பு, திரு மெஞ்ஞான சரநூல், ஞான முச் சுடர்ப் பதிகம் முதலியன அடங்கியிருக்கின்றன.

கலிகோ பைண்டு விலை ரூ. 3–80

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.